விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 03வியாழக்கிழமை (17.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 088

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# நாராயணன் செய்த சூழ்ச்சியே புலிகள் தோற்கக் காரணம்



## விக்கிலீக்ஸ் பரபரப்புத் தகவல்

(நியூயோர்க்)

**விடுதலைப்புலிகளுடனான இறுதி யுத்தத்துக்கு இந்தியா ஆதரவளிக்க இந்தியாவின் அப்போதைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனே பிரதான காரணம் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.**

இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை மேற்கோள் காட்டி விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள தகவல் குறிப்பில் நாராயணனை பிரதமர் அலுவலகத்தில் இருக்கும் ஒரு கேரள மாபியா என்று வர்ணித்திருப்பதுடன் காங்கிரஸ் கட்சியின் பாரம்பரிய புள்ளியாகவும் சித்திரித்துள்ளது.

சோனியா காந்தி குடும்பத்தின் நீண்டகால நம்பிக்கைக்குரிய விசுவாசியான அவர்தான் இலங்கையில் நடந்த இரத்தக் களரியைத் தடுப்பதில் இந்தியாவைத் தலையிடவிடாமல் செய்த (20ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த [சா/ தர] பரீட்சை பெறுபேறு வெளியாகியது

(கொழும்பு)

2010ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

பெறுபேறுகளின் அடிப்படையில் இவ்வருடம் 58.79 சதவீதமானோர் சித்தியடைந்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க நேற்று தெரிவித்துள்ளார். கடந்த வருடம் இப் பரீட்சையில் 48.51 சதவீத மாணவர்கள் சித்தியடைந்திருந்தனர்.

இம்முறை 3059 மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் ஏ தரச் (20ஆம் பக்கம் பார்க்க)

முன்னணிப் பெறுபேறுகள் 2ஆம் பக்கத்தில்

## கருணாவின் நண்பர் அலிசாஹிர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(ஏறாவூர்)

அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் நெருங்கிய நண்பரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அலிசாஹிர் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் அவர் படுகாயம் அடைந்துள்ளார்.

நேற்று ஏறாவூரில் நடந்த சம்பவத்தில் படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள்அமைப்பில் இருந்து விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) வெளியேறிச் சென்றபோது அலிசாஹிர் மௌலானாவே கருணாவை தனது வாகனத்தில் ஏற்றிச் சென்று காப்பாற்றியிருந்தார் என்பது தெரிந்ததே. (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசு- த.தே.கூட்டமைப்பு நாளை பேச்சுவார்த்தை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் நாளை நடைபெறும் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மூன்றாம் கட்டப் பேச்சுக்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தே பேசப்படும். அத்துடன் கடந்த மாதம் இடம்பெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுக்களில்அரசு உறுதியளித்தபடி தடுத்துவைக்கப்பட்டுள்ள புலிகள் இயக்க உறுப்பினர்களின் பெயர் வவுனியா பயங்கரவாதப் புலனாய்வுத் திணைக்களத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்படாதது குறித்தும் அரச தரப்பின் கவனத்திற்கு கொண்டுவரப்படும் எனவும் சுமந்திரன் கூறியுள்ளார்.

நாளை மாலை 4.00 மணிக்கு இடம்பெறவுள்ள இந்தப் பேச்சுக்களில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய விஸாவைப் பெறுவதற்கு இணையம் மூலம் விண்ணப்பம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இந்தியா செல்வதற்கான விஸாவைப் பெறுவதற்கு எதிர்வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதி முதல் www.indianvisaonline.gov.in/visa என்ற இணையத்தளத்தின் ஊடாகப் பதிவிறக்கம் செய்யப்பட்டு கணனி மூலம் பூர்த்தியாக்கப்பட்ட விஸா விண்ணப்பங்களையே இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஏற்றுக்கொள்ளும் என இந்திய உயர்ஸ்தானிகராலயம் நேற்று அறிவித்துள்ளது.

கொழும்பு, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள விஸா விண்ணப்ப நிலையங்கள் மற்றும் ஹம்பாந்தோட்டையிலுள்ள கவுன்ஸிலர் நிலையத்தின் ஊடாகவும் நட்பு ரீதியிலான விஸா சேவையை வழங்குவதே இந்த புதிய திட்டத்தின் நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூர்த்தியாக்கப்பட்ட விஸா விண்ணப்பத்தில் வெள்ளைநிறப் (20ஆம் பக்கம் பார்க்க)

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் தலைமை அலுவலகம் தென் சூடானில்

### உருத்திரகுமாரன் அறிவிப்பு

(கோலாலம்பூர்)

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உயர் காரியாலயம் தென் சூடானில் அமையும் என அதன் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் கடந்த 12ஆம் திகதி நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கூட்டரங்கம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உருத்திரகுமாரன் இணையவழிப் பரிவர்த்தனை ஊடாக கருத்துரை வழங்கினார்.

இதன் போது அவர் கருத்துரைக்கையில், எதிர்வரும் ஜூலை மாதம் சுதந்திர நாடாக மலரவுள்ள தென் சூடானில் நாடுகடந்த தமிழீழ அரசு தனது முதல் உயர் காரியாலயத்தை உத்தியோ (20ஆம் பக்கம் பார்க்க)

கொக்குவில் இந்துக் கல்லூரி-யாழ்.இந்துக் கல்லூரி அணிகள் மோதும்
இந்துக்களின் போர்
Battle of the Hindus
18, 19ஆம் திகதிகளில்
யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர் கைது

வட்டுக்கோட்டை பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற 6திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் ஒருவர் நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே வட்டுக்கோட்டைபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்தல தருமதிலக்க தலைமையில் சென்ற குழுவினரே குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

இவ் இளைஞன்வழங்கியதகவலின் அடிப்படையில்ஒருமடிக்கணனி, சிறு தொகைப்பணம், கைத்தொலைபேசி, ரீலோட் அட்டைகள், தொலைபேசி அட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.குறித்த நபரை பொலிஸார் மேலதிக விசாரணைக்குட்படுத்திய போது இவருடன் தொடர்புடைய வேறு சந்தேக நபர்கள் இருப்பதாக அறியகிடைத்துள்ளது. (ந-2)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# க.பொ.த.(சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்

2010 டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.இதில் யாழ்.மாவட்டத்தில் முன்னணிப் பெறுபேறுகளை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகள் 11பேரும், யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள் 10பேரும், அனைத்துப் பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்ற பாடசாலைகளின் மாணவர் விபரம் வருமாறு,

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

9 ஏ : ஆர்.ஜதுசன் , கே.சுதாகர், வி.ஹரிகரன், எஸ்.கிருபரன், ஏ.ஆராமுதன், ஈ.பார்த்தீபன், எம்.பரசுராம், ஆர்.பிரணவன், கே.புவிவர்மன், ஆர்.சயிந்தன்.

8 ஏ: க.அனோஜன், ந.யதுசன், எஸ்.குகநேசன், ஏ.அகஸ்ரீன், எஸ்.அருள்பவன், வி.ஜர்சிகன், ஆர்.யவநீசன், பி.ஜீவிதன், எஸ்.வெண்நிலவன்,

எஸ்.அச்சுதன்,ஜே.லக்ஷன் , எஸ்.மேகலாதன்,கே.யதுசன், ரி.ஆதவன், ரி.ஆதவலோசன், கே.யதுசன், என்.லவலோசன், ரி.யதார்தன், ப.மகிந்தனன், கே.நிலக்ஷன், பி.நிரோசன், பி.சதீஸ்குமார், எல்.தர்சிகன், பி.தீபகுகன், எஸ்.திவ்வியன், ரி.வைகுந்தன், ஐ.வினு, எம்.விதுன்.

**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

9 ஏ: சு.ஜெயந்தி, ச.பிரியந்தினி, ப.வினுசிகா, ந.பிருந்தா,

சி. சம்யா, ச.வைஸ்ணவி, கோ.தாரணி-, யோ.தேனுகா,ப. பிரவீனா,சி. இந்துஜா-, சி.சோபிதா

**கொக்குவில் இந்துக்கல்லூரி**

வை.லோஜிபன் (9ஏ), உ.சுதர்சன் (9ஏ), க.ஜசிந்தா (9ஏ), வ.விந்துஜா (9ஏ), க.மகிதாபன் (8ஏ,சி), ஆ.மயூரதன் (8ஏ,சி),

ம.எளினி (8ஏ ,சி), சூ.டிலோஜன் (7ஏ,பி.சி), ஜெ.யதுராஜ் (7ஏ,பி.சி), சி.யாதவன் (7ஏ,2சி), இ.யனுதை (7ஏ,2பி,சி),

த.தபோஜனன் (7ஏ,2பி), தி.தவலக்சன் (7ஏ,2பி), பா.ரூபினி (7ஏ,2பி), ஜெ.காயத்திரி (7ஏ,2பி),இ.தனுசியா (7ஏ,2பி), ப.ஜிந்துஜன் (6ஏ,பி,2சி),ம.பிரசாந்தன் (6ஏ,2பி,சி),

சி.திவியா (6ஏ,2பி,சி), த.சந்துஜன் (5ஏ,பி,3சி), ம.ரஜித் (5ஏ,4பி),ப.ஜிந்துஜா (5ஏ,4பி), ஆ.சிற்பவி (5ஏ,3பி,சி), அ.தனுசிஜன் (5ஏ,2பி,சி,எஸ்),

வி.நிதுசா (5ஏ,2பி.சி,எஸ்), நி.கோபி (5ஏ,2பி.2சி), அ.கர்சன் (5ஏ,2பி,2சி),

**ஆங்கில மொழி மூலம்**

கே.கயூரன் (6ஏ,2பி,எஸ்), சி.சாருஜன் (4ஏ,பி,3சி,எஸ்), எஸ்.கார்த்திகேயன் (4ஏ,3பி,சி,எஸ்), வி.ஜியானி (4ஏ,2பி,3சி).

**யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்**

கி.பிரணவன் (9ஏ), ஸ்ரீ.ஷாகிர்த்தியா (8ஏ,பி), ஞா.பிரவீணா (8ஏ,பி), செ.சஞ்சிகா (8ஏ,சி) (ஆங்கில மொழிமூலம்), க.பிருந்தாபன் (8ஏ,சி) (ஆங்கில மொழிமூலம்), செ.மயூரா (7ஏ,பி,சி),

சி.சுகந்தன் (7ஏ,பி,எஸ்), ச.சுஜீபன் (6ஏ,3பி), வி.முகுந்தன் (6ஏ,2பி,சி) (ஆங்கில மொழி மூலம்), யோ.ஜிவாகன் (6ஏ,2பி,சி), ம.மைதிலி (5ஏ,3பி,சி), பா.லக்ஷிப் பிரியா (5ஏ,3பி,சி),த.ஜசிந்திரன் (5ஏ,3சி),

**யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

பொ.கஜவதனி (9ஏ), சி.கஜானா (8ஏ,சி), பா.சுவேந்தினி (8ஏ,சி), பா.நிதர்சனா (8ஏ,சி),
கி.ஜீவிதா (6ஏ,3சி), சி.மதுரா (6ஏ,2பி, எஸ்), சு.சோபிகா (5ஏ,பி,2சி,எஸ்.), யோ.அபிஷாயினி (5ஏ,பி,2சி,எஸ்).

**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

சி.துளசி (9ஏ), க.நேர்த்திகா (8ஏ,பி), செ.சங்கீர்த்தனா (7ஏ,2பி),யோ.அஜிதா (6ஏ,3பி).

# காட்டுக்குச் சென்றவரை காணவில்லை

மல்லாவி கல்விளான் பகுதியில் கடந்த திங்கட்கிழமை காட்டுக்கு வேட்டைக்கு சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக குடும்பத்தினரால் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நபர் சம்பவதினத்தன்று காலை 8.30மணிக்கு வேட்டைக்குச் சென்றதாகவும், நேற்றுவரை அவர் வீடு திரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் அவரது துவிச்சக்கரவண்டி காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் புஸ்பராசா விஜயபாபு (வயது 25) என்ற இளம் குடும்பஸ்தரே காணாமல் போயுள்ளார். (ந-3,24)

# முல்லைத்தீவு கல்வி வலய தரம் 5 மாணவர்களுக்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுக்கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாத பாடசாலைக்குரிய மாணவர்கள்தரம் 5புலமைப்பரிசில்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு ஆனந்தகுமாரசாமி ந.பு.நி பாடசாலை, கதிர்காமர் ந.பு.நி பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தவிர்ந்த ஏனைய மாணவர்கள் எப்பகுதியில் இருந்தாலும் தங்கள் பதிவினை வவுனியா காமினி ம.வியில்தவறாது இம்மாதம் 26, 27ஆகிய இரு தினங்களி லும் மேற்கொள்ளலாம் என முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ந)

# ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு
# முன்னாள் அமைச்சர் ராசாவின் நெருங்கிய நண்பர் தற்கொலை

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழலில் சிக்கிய முன்னாள் அமைச்சர் ராசாவின் நெருங்கிய நண்பரான சாதிக் பாட்சா திடீரென நேற்று தற்கொலை செய்து கொண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பெரம்பலூரைச் சேர்ந்த ராசாவின் நெருங்கிய நண்பரான சாதிக் பாட்சா சென்னையில் கிரீன் ஹவுஸ் என்ற நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராக இருந்துவந்தார். இந் நிறுவனம் ராசா அமைச்சரான பின்னர் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் என்பதால் இவரும் ஸ்பெக்டரம் அலைக்கற்றை விசாரணை வளையத்தின் கீழ் கொணடு வரப்பட்டார்.

ஸ்பெக்டரம் வழக்கில் ராசா கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு நெருக்கமான நண்பர்கள், உறவினர்கள், குடும்பத்தினர்கள் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் மத்திய புலனாய்வுக் கழகம் அதிரடி சோதனைகளை நடத்தியது.இவ்வாறு மத்திய புலனாய்வுக் கழகத்தின் சோதனைக்கு உள்ளானவர்களில் சாதிக் பாட்சாவும் ஒருவர்.

நேற்று உச்சநீதிமன்றத்தில் ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை தொடர்பான வழக்கில் விசாரணை நிலைவர அறிக்கையை மத்திய புலனாய்வுக் கழகம் தாக்கல் செய்ததுடன் எதிர்வரும் 31ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் சென்னை தேனாம்பேட்டையில் அமைந்துள்ள தனது வீட்டில் சாதிக் பாட்சா நேற்று தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டார். சாதிக் பாட்சாவின் தற்கொலை ஸ்பெக்டரம் அலைக்கற்றை ஊழல் வழக்கில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

# திறந்த பல்கலைக்கழகம் யாழ்.பிராந்தியத்தில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் CEMBA/ CEMPA நிகழ்ச்சித் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.விண்ணப்பப் படிவங்களை மார்ச் 21 ஆம் திகதி வரை பிறவுண் வீதி,கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பதாரிகள் இளமாணிப் பட்டம் அல்லது அதற்கு சமமான தொழிற்தகைமையும் 2 வருட நிறைவேற்று தரத்திலான சேவை அனுபவத்துடன் சிறந்த ஆங்கில அறிவும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.அத்துடன் மார்ச் 26-ம் திகதி நடைபெறும் தெரிவுப் பரீட்சையில் திருப்திகரமான புள்ளிகளைப் பெறவேண்டும். இக்கற்கை நெறியினை முதன்முறையாக யாழ்.பிராந்திய நிலையத்தில் நடத்துவதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் ஆங்கில கற்கை நெறிக்கான இரண்டாவது மீட்டல் பரீட்சை 19.03. 2011 ஆம் திகதி நடைபெறவிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 26.03.2011 அன்று காலை 9.00மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ந)

# சங்கிலி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வயதான பெண் ஒருவரின் 2பவுண் தங்கச்சங்கிலியை அறுத்த திருடன் அவரை தள்ளி விழுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளான்.

கோண்டாவில் குமரகோட்டம் பகுதியிருந்து நேற்று முற்பகல் 11.30மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த பெண்மணி தனது வீட்டின் முன் உள்ள வீதியில் நின்றிருந்த சமயம் அவ் வீதியால் வந்த நபர் ஒருவர் அப்பெண்ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்ததோடு அப்பெண்ணை தள்ளி விழுத்தி விட்டு சென்றுள்ளார். (ந)

**Walk - in Interview**
**19-03-2011 (Saturday)**

யாழ்.நகர், சவகச்சேரி, நெல்லியடியில் அமைந்துள்ள கிளைகளிற்கு கீழ்க்கண்ட பணியிடங்களிற்கான நேர்முகத்தேர்வு எதிர் வரும் சனிக்கிழமை 8 A.M - 2 P.M வரை யாழ்.நகர் அலுவலகத்தில் நடைபெறும்

Student Relation officer - Female
Trainee Instructor - Male / Female
Computer Instructor - Male / Female
Hardware Technician / Faculty - Male
Assistant Lecturer ICT - Male / Female
Assistant Lecturer (Tally,QB) - Male
Lecturer for Multimedia Technology - Male / Female
Lecturer - C,C++,Java,VB & Auto CAD - Male
Lecturer - English Language - Male

The Applicant should possess 2 Passes in G.C.E. A/L, Recognized Computer Diploma, Fluency in English and ability to work as a team.மேல் குறிப்பிட்ட நகரங்களுக்கு அண்மையில் உள்ள விண்ணப்பதாரிகள் விரும்பத்தக்கது.

**ASIAN COMPUTER EDUCATION**
2G ,Stanley Road, Jaffna.T.P - 021-222-5677
E-mail : asianedu@dialogsl.net
(அ-2703)

**Computer Mega Sale**

2011 மார்ச் 19,20,21 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில், 22,23ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெறும்.அரச உத்தியோகத்தர்கள், மாணவர்களுக்கு விசேட விலை.
மேலதிக தொடர்பு:
0718570609,0759997700.
(4058)

**காணி விற்பனைக்கு**

சுதுமலை தெற்கில் றிஜிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கையில் 57/16 இலக்கக் காணியில் சிறுகுடும்பத்திற்குப் போதுமான வீட்டிற்கு அத்திபாரம் போடப்பட்ட காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
K.சீவறட்ணம்
C/O K.[illegible]
(4053)

**அறை வாடகைக்கு**

யாழ்.நகருக்கு அண்மையில் படிக்கும்/ தொழில்புரியும் பெண்ணொருவர் தங்கக் கூடிய, அமைதியான சூழலில் அறை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 07[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாய வெற்றியை நோக்கி இங்கிலாந்து இன்று மேற்கிந்தியத் தீவுகளுடன் பலப்பரீட்சை

(சென்னை)

உலகக்கிண்ண லீக்போட்டியில் இன்றைய வாழ்வா.... சாவா... மோதலில் இங்கிலாந்து அணி மேற்கிந்தியத்தீவுகள் அணியை சந்திக்கிறது. இதில் வென்றால் இங்கிலாந்து காலிறுதி வாய்ப்பை தக்கவைக்கலாம். இல்லையெனில் தொடரை விட்டு வெளியேற நேரிடும்.

இந்திய துணைக்கண்டத்தில் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இன்று சென்னையில் நடக்கும் பி பிரிவு லீக் போட்டியில் இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதுகின்றன.

இத் தொடரின் ஆரம்பத்தில் இருந்தே இங்கிலாந்து அணி ஏற்ற இறக்கங்களை சந்தித்து வருகிறது. முதல் போட்டியில் நெதர்லாந்தை வென்றது.

இந்தியாவுடனான போட்டியை சமனிலை செய்தது. அயர்லாந்துக்கு எதிராக 327 ஓட்டங்கள் எடுத்தும் அதிர்ச்சித்தோல்வியை சந்தித்தது. தென்னாபிரிக்காவை வீழ்த்தியது. பங்களாதேஷ் அணிக்கு எதிராக அடைந்த தோல்விதான் இங்கிலாந்தை தற்போது பெரும் சிக்கலுக்கு தள்ளியுள்ளது.

இன்று தனது கடைசி லீக் போட்டியில் களமிறங்குகிறது. தொடரின் பாதியில் நட்சத்திர வீரர் பீற்றர்சன், திரோட் வெளியேறியது ஒரு விதத்தில் பாதிப்பாகவே உள்ளது.



**ஸ்ரோரஸ் நம்பிக்கை**

இருப்பினும் இதுவரை 298 ஓட்டங்கள் எடுத்துள்ள அணித்தலைவர் ஸ்ரோரஸ், 5 போட்டிகளில் நான்கு அரைச்சதம் அடித்த திரோட் 289 ஓட்டங்கள், பெல், ரவி பொப்ரா போன்றவர்கள் துடுப்பாட்டத்தில் கைகொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். பீற்றர்சனுக்குப் பதில் வந்த இயன் மோர்கன் நடுத்தரவரிசையில் தொடர்ந்து அசத்தலாம்.

**பந்துவீச்சு மோசம்**

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சு தான் மிகவும் பலவீனமாக உள்ளது. இது வரை பங்கேற்ற ஐந்து போட்டிகளில் 1,351 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து கனடாவுக்கு அடுத்த இடத்தில் (1,370 ஓட்டங்கள்) இரண்டாவது இடத்தில் உள்ளார்கள்.

இந்தியாவுக்கு எதிராக மட்டும் அசத்திய பிரஸ்னன், ஷாஜத் இன்று ஆறுதல் தரவேண்டும். 5 போட்டிகளில் 4 விக்கெட் மட்டும் வீழ்த்திய அண்டர்சன், சுழலில் சுவான் ஆகியோர் ஹயில், பொல்லார்டின் அதிரடியை எப்படி தவிர்க்கப் போகின்றனர் என்று தெரியவில்லை.

**போல்லார்ட் பலம்**

முதல் போட்டியில் மட்டும் தோற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி அடுத்து நெதர்லாந்து, அயர்லாந்து, பங்களாதேஷ் அணிகளை வீழ்த்தியது. அணியின் நட்சத்திர வீரர் போல்லார்ட் சரியான நேரத்தில் போர்முக்கு திரும்பியுள்ளார்.

ஆரம்ப வீரர் ஹயிலும், அதிரடியில் அசத்துகிறார். தவிர டரன் பிரவோ, சிமித்தும் சாதிக்க காத்திருக்கின்றனர். வீரர்கள் சந்தர்போல், சர்வான் ஆகியோர்கள் இன்னும் ஒரு அரைச்சதம் கூட அடிக்காதது குறையாக உள்ளது.

**பென் அசத்தல்**

உலகக்கிண்ண தொடர் ஆரம்பமாகும் முன் மேற்கிந்தியத்தீவுகளின் பந்துவீச்சு மோசமாக கருதப்பட்டது. ஆனால் தற்போது கீமர் ரோச் (11 விக்) நம்பிக்கை நாயகனாக வலம் வருகிறார். சுழலில் சுலைமன் பென் 12 விக்கெட் சாய்த்திருப்பது மிகப்பெரிய திருப்பம். தவிர அணித்தலைவர் சமியும் ஆறுதல் தருகிறார்.

**யாருக்கு வாய்ப்பு?**

இன்றைய போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வென்றால் காலிறுதிக்கு முன்னேறிவிடும் மாறாக இங்கிலாந்து வென்றால் காலிறுதி வாய்ப்பை தக்கவைக்கலாம்.

**இங்கிலாந்துக்கு சாதகம்**

இரு அணிகளும் உலகக்கிண்ணத் தொடரில் இதுவரை 5 போட்டிகளில் மோதியுள்ளன. இதில் இங்கிலாந்து அணி 4 முறை வென்றுள்ளது. மேற்கிந்தியத்தீவுகள் ஒரு போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

மற்றபடி சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இது வரை மோதிய 82 போட்டிகளில் 41இல் மேற்கிந்தியத்தீவுகளும், 37இல் இங்கிலாந்தும் வென்றுள்ளன. 4 போட்டிகளுக்கு முடிபில்லை.


கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!

MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்

தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்

கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்

1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி



அரையிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள்?

1. ............ 2. ............
2. ............ 4. ............

பெயர்: ............
முகவரி: ............
............
தொ.பே: ............
தே.அ.அ.இல: ............

சரியான விடையை எழுதி கூப்பனை பூரணப்படுத்தி 22.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3490



இன்றைய கேள்வி?


பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் அதிக பவுண்டரிகளை விளாசிய வீரர் யார்?

............

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 19.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.

பெயர்:- ............
முகவரி:- ............
............
தொ.பே:- ............
தே.அ.அ.இல:- ............

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

## உலகக்கிண்ண கிரிக்கெட்-2011

சம்பியனாகும் நாடு? ............

தொடர் நாயகன் விருது யாருக்கு? ............

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர் ............
முகவரி ............
தொலைபேசி ............
தே.அ.அ.இல ............

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


இன்னும் பல பரிசுகள்

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com

SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592

PCS PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road,Jaffna
T.P:021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்த்திருவிழா

(மாதகல்)

மாதகல் பாணாவெட்டி புவனேஸ்வரி அம் மன் ஆலய தேர்த்திருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. (ஶ்ரீ-3-47)

## சிறப்புப் பட்டிமன்றம்

மாதகல் பாணாவெட்டி அம்மன் ஆலய பூங்காவன உற்சவத்தின் சிறப்பு நிகழ்வாக எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்.பட்டிமன்ற குழுவினர் வழங்கும் பண்டிதர் பொன்.சுகந்தனின் தலைமையிலான சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. (ஶ்ரீ-3)

## மகா கும்பாபிஷேகம்

(பொலிகண்டி)

கொற்றாவத்தை அபிட்டியம்புலம் ஶ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.48 மணிவரையான சுப முகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

கிரியைகள் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு ஆரம்பமாவதுடன் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் இரவு 7 மணி வரைக்கும் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஶ்ரீ-3-48)

## சொற்பொழிவுகள்

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளி தோறும் நடைபெற்று வரும் ஆன்மீகத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் 'தேவி பாகவதம்' தொடர் சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் வழங்கவுள்ளார். (ஶ்ரீ-3-35)

❖❖❖❖❖

(மருதங்கேணி)

ஶ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிபுற்றதும் 'கண்ணுக்கு இனிய கண்ணன்' எனும் விடயம் பற்றி வதிரி வடக்கு மெ.மி.பாடசாலை அதிபர் ப.செல்வவிநாயகம் ஆன்மீகச் சொற்பொழிவாற்றவுள்ளார் (ஶ்ரீ-3-35)

**யாழ்.செய்திகள்**

# "பன்மைத்துவ கலாசாரத்தினூடாக சமாதானம்" கோட்ட மட்ட போட்டி முடிபுகள்

(அல்வாய்)

மதர் ஒவ் ஶ்ரீலங்கா அமைப்பினால் பன்மைத்துவ கலாசாரத்தினூடாக சமாதானம் எனும் தொனிப்பொருளில் நடத்தப்பட்ட போட்டிகளின் கோட்ட மட்ட முடிபுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு;

**கரவெட்டி (சித்திரம்)**

பிரிவு I

கே.கம்சன் (மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலை), எஸ்.துஜரூஜன் (கரணவாய் தாமோதர வித்தியாலயம்), ரி.தாரணி (ஞானாசாரியார் கல்லூரி), ஜெ.றெஜீதரன் (கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலை)

பிரிவு II

பி.பிரவீன் (நெல்லியடி ம.ம.வி.), இரண்டாம் இடம்– ஏ.கல்யாண் (ஞானாசாரியார் கல்லூரி), ஆர்.கஜீபன் (வதிரி திருஇருதயக் கல்லூரி)

பிரிவு III

எஸ்.விதுர்ஷா (நெல்லியடி ம.ம.வி.), ரி.பிரசாந் (அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), ஏ.ஜெயசீலன் (வதிரி திருஇருதயக் கல்லூரி)

பிரிவு IV

ரி.டினேஸ் (நெல்லியடி ம.ம.வி.), எம்.ஜெயவதனி (கரணவாய் ம.வி.), எம்.உஷாகாந்தன் (விக்கினேஸ்வராக் கல்லூரி)

பிரிவு V

எம்.அபிராம் (நெல்லியடி ம.ம.வி.), எஸ்.ரவிராஜ் (தேவரையாளி இந்துக் கல்லூரி), எஸ்.ஐங்கரன் (விக்னேஸ்வராக் கல்லூரி)

**கரவெட்டி (கவிதைப் போட்டி)**

பிரிவு I

வி.சாளினி (கரணவாய் ம.வி.), கே.யுவேகா (நெல்லியடி ம.ம.வி.), ஆர்.பிரசின் (ஞானாசாரியார் கல்லூரி)

பிரிவு II

எம்.அக்சாளினி (தேவரையாளி இந்துக் கல்லூரி), எஸ்.தார்சின் (நெல்லியடி ம.ம.வி.), எம்.பேபிசாளினி (கரணவாய் ம.வி.)

பிரிவு III

எஸ்.சுகந்ஜி (விக்னேஸ்வராக் கல்லூரி), ரி.பகீரதி (கம்பர்மலை அ.த.க.பாடசாலை), எஸ்.பிரசாந் (நெல்லியடி ம.ம.வி.)

பிரிவு IV

எம்.இலக்கியா (விக்னேஸ்வராக் கல்லூரி), கே.சிவகுமார் (ஞானாசாரியார் கல்லூரி), ஜெ.ஜெயசுகிர்தன் (நெல்லியடி ம.ம.வி.)

**பருத்தித்துறை (சித்திரம்)**

பிரிவு I

ரி.அஸ்மிதா (யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி.), பி.அர்ச்சயா (யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தி.), எஸ்.கௌரீசன் (யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தி.)

பிரிவு II

எஸ்.சிந்துஜன் (யா/ஹாட்லி கல்லூரி), எஸ்.விதுஷன் (யா/வல்வை சிவகுரு வித்தி.), ஏ.பிறின்சா (யா/சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை)

பிரிவு III

கே.ராகுகரன் (யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தி.), ஏ.சுஜன்ராஜ் (யா/தும்பளை சிவப்பிரகாச வித்தி.), ரி.சுவர்ணராஜ் (யா/ஹாட்லி கல்லூரி)

பிரிவு IV

வை.பகீரதன் (யா/ஹாட்லி கல்லூரி), வை.கார்த்திகேஜன் (சிதம்பராக் கல்லூரி), எம்.நிசாந்தன் (யா/வல்வை சிவகுரு வித்தி.)

பிரிவு V

வி.சோபிகா (யா/வட இந்து மகளிர் கல்லூரி)

**பருத்தித்துறை (கவிதை)**

பிரிவு I

எஸ்.தயாளினி (யா/சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை), எஸ்.சிந்துஜா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.கிருத்திகா (யா/தும்பளை சிவப்பிரகாச வித்தி.)

பிரிவு II

ஆர்.சுபாசினி ( யா/வல்வை சிவகுரு வித்தி.), ஆர்.எஸ்.தேனுஜா (யா/சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை), ஜெ.நிதுசா (யா/பொலிகண்டி இ.த.க.பாடசாலை)

பிரிவு III

எம்.தமிழரசன் (யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை), வி.ஜெயமீரா (யா/வல்வை இந்து மகளிர் கல்லூரி), ஆர்.கிருஷாந் (யா/வேலாயுதம் ம.வி.)

பிரிவு IV

ஏ.கயல்விழி (யா/வட இந்து மகளிர் கல்லூரி), ஜெ.மாதங்கி (சிதம்பராக் கல்லூரி), கே.பிரசாந் (யா/ஹாட்லி கல்லூரி). (ஶ்ரீ-3-19)

## பொற்பதி கடற்கரையிலிருந்து குடத்தனை சந்திவரை புனரமைக்குமாறு கோரிக்கை

பொற்பதி கடற்கரையிலிருந்து குடத்தனைச் சந்தி வரைக்கும் நீண்டுசெல்லும் சுமார் 3 கிலோமீற்றர் வீதியானது போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் உடைந்து குன்றும் குழியுமாக ஒடுங்கிய வீதியாகக் காணப்படுகின்றது.

இதன்ஊடாக போக்குவரத்தில் ஈடுபடும் அரச பேருந்துகள் மற்றும் ஏனைய தனியார் வாகனங்கள் என்பன பெரும் சிரமத்தின் மத்தியிலேயே போக்குவரத்தில் ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

துவிச்சக்கரவண்டி,மோட்டார்சைக்கிள் ஆகியவற்றில் பயணிப்போர் வாகனங்கள் வரும்போது இறங்கி நின்று மீண்டும் செல்ல வேண்டியதாக உள்ளது.

எனவே மக்களின் சிரமத்தைக் கருத்திற் கொண்டு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து போக்குவரத்தைத் துரிதப்படுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஶ்ரீ-3-64)

## பாசிக் நிறுவனத்தினால் வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள்

பாசிக் நிறுவனத்தினால் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி நிறுவனத்தினால் 53 படகுகள், 53 (யமகா) இயந்திரம் மற்றும் 50 கட்டுமரங்கள், ஒவ்வொரு கட்டுமரத்திற்கும் 12 வலைகள் என்பன கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இவ்வுபகரணங்கள் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, வத்திராயன், ஆழியவளை ஆகிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதில் வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 11 படகுகள், 11 இயந்திரங்கள் என்பனவும் கட்டைக்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 11 படகுகள், 11 இயந்திரங்கள், ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 15 படகுகள், 15 இயந்திரங்கள் மற்றும் 25 கட்டுமரங்கள், அதற்குரிய 12 வலைகள் என்பனவும் வத்திராயன் கடற்றொழிலாளர் சங்கத்திற்கு 16 படகுகள், 16 இயந்திரங்கள் மற்றும் 25 கட்டுமரங்கள், அதற்குரிய 12 வலைகள் என்பன வழங்கப்படவுள்ளதுடன் இதற்குரிய பயனாளிகளின் விபரங்களும்அன்றைய தினம் பதிவு செய்யப்பட்டது. (ஶ்ரீ-3-64)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

வடமராட்சி வலய அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணிவரை யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு வரும் அதிபர்கள் தர உள்ளீட்டு முன்னேற்ற அறிக்கை, உயர்கல்விச் செயற்பாட்டு முன்னேற்ற அறிக்கை ஆகியவற்றைத் தவறாது எடுத்து வருமாறு வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-3-19)

## தரம் 9இற்கு மேற்பட்ட வகுப்புகள் ஆரம்பம்

மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 9 இற்கு மேற்பட்ட வகுப்புக்களை நடாத்துவதற்கு கல்வி அமைச்சின் அனுமதி கிடைத்துள்ளது.

மேற்படி ஒழுங்குகளை பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் தென்மராட்சி இணைச்செயலாளர் குமார் சர்வானந்தா மற்றும் ஆயர் இல்லக் குருக்கள் ஆகியோர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-3-29)







யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் க.கனகராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க , வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ராஜேந்திரன், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கைலாசநாதன் ஆகியோர் வித்தியாலய அதிபரால் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினர் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட விருந்தினர்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்படுவதையும் வெற்றியீட்டிய மாணவர்கள் சான்றிதழ்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# பருவகால சிட்டையை வழங்கி மாணவர்கள் பயணிக்கலாம்

## கிளி.தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினால் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக இலவச பாடசாலை நடத்தப்பட்டது.

தற்பொழுது மாணவர்களுக்கு பருவ காலச்சிட்டை வழங்கப்பட்டுள்ள நிலையில் இலவச பாடசாலை சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக அச்சங்கம் அறிவித்துள்ளது.

மாநகர பயணிகள் சேவை ஊர்தியில் மாணவர்கள் பருவகாலச் சிட்டையை வழங்கிப் பயணிக்கலாம் என்பதுடன் பயணிக்க அனுமதிக்காத பேருந்து இலக்கத்தை தமக்கு அறியத்தரும்படியும் பருவ கால சிட்டை பெறாத மாணவர்களுக்கு அரைக் கட்டணம் அறவிடப்படும் எனவும் சங்கத் தலைவர் ரி.ஜெகதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

# மாணவியின் பிறந்த நாளுக்கு பேஸ்புக் வாயிலாக வந்த ஒன்றரை இலட்சம் விருந்தினர்கள்

## மிரண்டு போன குடும்பத்தினர்

அவுஸ்திரேலியாவின் 15 வயது மாணவி ஒருவர் தனது பிறந்தநாள் விழாவிற்கு தனது நெருங்கிய நண்பர்களை மட்டும் பேஸ்புக் வாயிலாக அழைத்த போது, ஒரு இலட்சத்து 80 ஆயிரம் விருந்தினர் கலந்து கொள்ள வருவதாகப் பதில் வந்ததையடுத்து மிரண்டு போன மாணவி தனது பிறந்த தினத்தை இரத்து செய்துவிட்டார்.

அவுஸ்திரேலியாவின் நியூ சௌத்வேல்ஸ் மாகாணத்திலுள்ள சாட்ஸ்வுட் நகரில் வசித்து வந்த ஜெஸ் (வயது 15) என்ற மாணவி தனது பிறந்த தினத்தைக் கொண்டாட தனது நெருங்கிய நண்பர்கள் 10 பேருக்கு சமூக வலைத்தளமான பேஸ்புக் வாயிலாக அழைப்பு விடுத்திருந்தார்.

அழைப்பு விடுத்த 24 மணி நேரத்திற்குள்ளாக பேஸ்புக்கினைத் திறந்து பார்த்த போது ஜெஸ் அதிர்ச்சியடைந்தார்.

ஏறத்தாழ 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பிறந்தநாள் விழாவில் கலந்துகொள்ள விருப்பதாகவும் பிறந்தநாள் பரிசாக ரூபாய் 15.59 டொலர் அளவுக்குப் பொருட்கள் இருந்ததாகவும் பதில் வந்தது.

வெறும் 10 நண்பர்களுக்கு அனுப்பிய தகவல் 20 ஆயிரம் பேருக்கு எப்படி பேஸ்புக் வாயிலாகப் பரவியது எனத் தெரியாமல் திகைத்தார்.

இது குறித்து ஜெஸ்ஸின் தந்தை கூறுகையில்,

500 விருந்தினர்களை மட்டும்தான் எனது மகள் பிறந்த தின விழாவிற்கு பேஸ்புக் விளம்பரம் வாயிலாக அழைத்திருந்தாள்.

ஆனால் அது ஒரு இலட்சத்து 80 ஆயிரம் பேரை அழைத்ததாகப் பதில் வந்திருப்பது மோசடி வேலைதான். இதில் என் மகளிற்கு எந்தத் தொடர்பும் இல்லை.

இவரது பேஸ்புக் கணக்கினை யாரோ தவறாகப் பயன்படுத்தி இப்படி ஒரு காரியத்தினைச் செய்துள்ளனர். பிறந்த தினம் கொண்டாடுவதனை இரத்துச்செய்துவிட்டோம் என்றார். (ஸ்ரீ-2)

# ஜப்பானிலுள்ள இலங்கையர் பற்றி அறிய தகவல் மையம்

(கொழும்பு)

ஜப்பானிலுள்ள இலங்கையர்கள் பற்றித் தகவல் அறிந்துகொள்ள தகவல் மையம் ஒன்றை இலங்கை வெளிவிவகார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

24 மணிநேரமும் இயங்கும் இச்சேவையை 011 4719593, 011 5743362, 0772267929 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் பணிபுரிகின்ற இலங்கையரை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மூலமாக பாதுகாப்பாக தாய்நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் ஜப்பானில் வசித்து வருவதாகவும் அவர்களில் சிலர் ஜப்பானிலுள்ள இலங்கை தூதரகத்தை நாடி தாம் இலங்கைக்குத் திரும்புவதற்கு ஏற்பாடு செய்து தரும்படி கோரியிருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

நேற்று தொடக்கம் எயார்லங்கன் மேலதிக விமான சேவைகளை ஜப்பானிலிருந்து ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)


யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வருடாந்த பொதுக்கூட்டம் 2011

காலம் - 27.03.2011 (ஞாயிறு)
நேரம் - காலை 9.00
இடம் - பாடசாலை பிரதான மண்டபம்

பெற்றோர்கள், ஆசிரியர்கள் யாவரும் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
தலைவர், செயலாளர் - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.

(சி/2710)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழும்



மண்ணில்
25
10
1937

மனங்களில்
16
02
2011

அமரர் சி.வ. சந்திரசேகரம்

அவர்களுக்கு

எமது 31ஆம் நாள் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன் நாளை (18.03.2011) காலை 6.00 மணிக்கு பருத்தித்துறை தாமரைக் குளத்தடி பொதுப் பணிமன்ற அந்தியேட்டி மடத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்

(4057)




யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் (யாழ்கோ. லிமிட்டெட்) அண்மையில் யாழ். பஸ் நிலையத்தில் பாற்பொருள் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ. பற்குணராசா மங்கல விளக்கேற்றுவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறித்தோட்டங்களை அமைத்தல் தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சிநெறி

அரச அலுவலகங்கள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களின் வளவுகளிலும் விடுதி வளவுகளிலும் மற்றும் பாடசாலைகளின் வளவுகளிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மரக்கறித் தோட்டங்களை அமைத்தல் தொடர்பான ஒரு நாள் தொழில்நுட்பப் பயிற்சிநெறி எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையான 5 நாட்களுக்கு தொடர்ச்சியாக திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் காலை 9 மணிமுதல் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் பௌதீக வளங்கள், காலநிலை என்பவற்றுக்கமைவாக அமைக்கப்படவுள்ள தோட்டத்தை திட்டமிடல், கூட்டெரு தயாரித்தல், நாற்றுக்களின் உற்பத்தி நடுகையும் பராமரிப்பும் பயிர்ப்பாதுகாப்பு முதலான விடயங்களை உள்ளடக்கப்பட்டிருக்கும். இப்பயிற்சி வகுப்பில் அலுவலகத்தின் தோட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு பொறுப்பான உத்தியோகத்தரும் அதனை அமைப்பதற்கான கள ஊழியரும் அழைக் கப்படுகின்றனர்.

21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பங்குபற்றுனர்கள் ஏதாவது ஒரு தினத்தில் இப்பயிற்சியில் பங்குபற்ற முடியும். பயிற்சியில் கலந்து கொள்ளவிருக்கும் தினத்தினை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், பலாலி வீதி, திருநெல்வேலி என்ற முகவரிக்கோ அல்லது 0212222174 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் கீழ்வரும் தனியார் நாற்று மேடையாளர்கள் மரக்கறி நாற்றுக்களை விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுடன் தொடர்புகொள்ள விரும்புவோர் நாற்று மேடையாளர், கோப்பாய் வீதி, உரும்பிராய் என்ற முகவரியுடனோ அல்லது 0779906466 என்ற தொலைபேசி எண்ணுடனோ தொடர்பு கொண்டு கத்தரி-10000 மிளகாய் 10000 தக்காளி-6000 வரையான நாற்றுக்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் நாற்று மேடையாளர், பவி சாரு பூங்கனிச்சோலை, பலாலி விதி, கோண்டாவில் என்ற முகவரியுடனோ அல்லது 021 222 8199 என்ற தொலைபேசி எண்ணுடனோ கத்தரி-1500, மிளகாய் 2500, தக்காளி-500 வரையான நாற்றுக் களைப் பெற்றுக் கொள்ளலாம் என பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-6)

# ஜப்பானில் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கம் இலங்கைப் பொருளாதாரத்தை பாதிக்காது

## இலங்கை மத்தியவங்கி அறிவிப்பு

இயற்கையின் சீற்றம் காரணமாக ஜப்பான் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம் இலங்கைப் பொருளாதாரத்தைப் பாதிக்காதென மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஜப்பானின் பிரதான பொருளாதார மையத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் இதன் காரணமாக ஜப்பானின் வெளிநாட்டு முதலீடுகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாதெனவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஜப்பானில் இருந்து இலங்கைக்கு இறக்குமதியாகும் வாகனங்கள் ஜப்பானுக்கு வெளியே உள்ள நாடுகளில் பொருத்தப் பட்டு இங்கு அனுப்பப்படுவதால் ஜப்பான் வாகன இறக்குமதியில் தடைகள் ஏற்படாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# பொன்சேகாவின் ஆதரவாளர்களுக்கு புகலிடம் வழங்க நேபாளம் மறுப்பு

(கொழும்பு)

நேபாள அரசாங்கம் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவின் ஆதரவாளர்களுக்கு புகலிடம் வழங்குவதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சரத் பொன்சேகாவிற்கு நெருக்கமாக செயற்பட்ட சிலர் தற்போது நேபாளத்தில் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு நேபாளத்தில் வாழ்ந்து வரும் நபர்கள் அரசியல் புகலிடம் கோரியதாகவும் அந்தக் கோரிக்கையை அந்நாட்டு அரசாங்கம் நிராகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

அரசாங்கத்தினால் தமக்கு ஏதேனும் ஆபத்து நேரிடும். அச்சம் காரணமாக தாம் அடைக்கலம் கோருவதாக புகலிடக் கோரிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசியல் தஞ்சம் கோரியவர்களின் பெயர் விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. இதேவேளை இந்த தகவல் தமக்கு ஆச்சரியமளிப்பதாக நேபாளத்திற்கான இலங்கை தூதுவர் தோசபால ஹேவகே தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சுவிஸ் மாநகர சபை தேர்தலில் ஈழத்தமிழர் வெற்றி

சுவிஸ் வாழ் ஈழத்தமிழர் ஒருவர் அங்கு நடை பெற்ற மாநகர சபைத் தேர்தலில் முக்கிய நகரமொன்றில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார்.

சுவிஸின் முக்கிய நகரமான லவுசாந்த நகரில் நடைபெற்ற மாநகர சபைத்தேர்லில் போட்டியிட்ட யாழ்பாணத்தவரான நமசிவாயம் என்பவரே வெற்றி பெற்றுள்ளார். சுவிஸ் சோஷலிச கட்சியின் சார்பில் அவர் தேர்தலின் போட்டியிட்டிருந்தார்.

அக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட 85 வேட்பாளர்களில் அவர் பதினெட்டாவது இடத்தை பிடித்துள்ளதுடன் 5 ஆயிரத்து813 வாக்குகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

அவருக்கு தமிழர்களின் வாக்குகளுக்கு மேலதிகமாக சுவிஸ்நாட்டவர்களும் வாக்களித்திருப்பதாக அறியமுடிகின்றது.

ஜெனீவா மனித உரிமைப்பேரவைகளில் கலந்து கொண்டு தமிழ் மக்களின் துயரங்களை ராஜதந்திரிகளுக்கு விளக்கிக்கூறும் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்த காரணத்தால் அவர் தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்தார். (ஸ்ரீ-2)

# மிஹின்லங்கா விமானசேவைக்கு புதிய விமானம் கொள்வனவு

(கொழும்பு)

மிஹின்லங்கா விமான சேவைக்கு புதிய விமானம் ஒன்றை எதிர்வரும் யூன் மாதம் கொள்வனவு செய்யவிருப்பதுடன் விமான நிலையங்களை அபிவிருத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாக சிவில் விமான சேவை அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

இந்தியா, சிங்கப்பூர், டுபாய் மற்றும் மாலைதீவுக்கான விமானப் பயணங்கள் அதிகரிக்கப்படும் என்றும் மிஹின் லங்கா நிறுவனத்திற்கான விமானங்களின் எண்ணிக்கை இவ்வருடம் மூன்று வரை அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறுகிய கால விமானப் பயணங்களை மேம்படுத்துவது தொடர்பாக மிஹின் லங்கா விமான சேவைகளை பயன்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

அத்துடன் சீ பிளேன் சேவைக்கு இவ்வருடம் இரண்டு விமானங்களை கொள்வனவு செய்யவும் அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை பலாலி மற்றும் இரத்மலானை விமான நிலையங்களை வர்த்தக விமான நிலையங்களால் அபிவிருத்தி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

பலாலி விமான நிலையத்தை வர்த்தக விமான நிலையமாக மேம்படுத்தவும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்தியை ஆரம்பிக்கவும் இந்திய அரசாங்கம் அனுசரணை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# ஜப்பானுக்கான விமானசேவையை அதிகரிப்பதற்கு தீர்மானம்

ஜப்பானுக்கான விமானப்பயணங்களை இன்று முதல் அதிகரிப்பதற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் திட்டமிட்டுள்ளது.

ஜப்பானில் ஏற்பட்டுள்ள அவசரகால நிலையை அடுத்து அங்கிருந்து விமானப் பயணங்களை மேற்கொள்ள பதிவுசெய்துள்ளோரின் எண்ணிக்கை அதிகரித்தமையே இதற்கான காரணம்.

இத்திட்டத்தின் முதல் விமானமான யூ.எல் 1423 இன்று மாலை 4.30 மணிக்கு டோக்கியோவிலிருந்து புறப்படவுள்ளது. அவ்விமானம் நாளை அதிகாலை 2.15 மணிக்கு கொழும்பை வந்தடையும்.

அதேவேளை ஜப்பானிய அணு நிலையங்களில் ஏற்பட்ட வெடிப்பையடுத்து ஜப்பானிலுள்ள வெளிநாட்டுப் பிரஜைகளை பாதுகாப்பதற்கான அவசரகால நடவடிக்கை எதையும் மேற்கொள்ள வேண்டிய தேவை இல்லை என ஜப்பானிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளிடம் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார் (ஸ்ரீ-2)

# 12 இலட்சம் ரூபா பெறுமதியான 80 கிலோ கஞ்சா கண்டுபிடிப்பு

(கொழும்பு)

12 இலட்சம் ரூபா பெறுமதியான 8 கிலோகிராம் கஞ்சாவை சுங்கத்திணைக் களம் கைப்பற்றியுள்ளது.

மொனராகல ஒக்கம்பிட்டிய அரச மரச் சந்தி பிரதேசத்தில் நேற்று முன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே கண்டு பிடிக்கப்பட்டதாக திணைக்களத்தின் ஊடக பேச்சாளர் பிபாத் ஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

இதன்போது போதைப் பொருளை விற்பனை செய்வதற்கு தயாராக இருந்த பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது மேலும் போதைப் பொருள் விற்பனை தொடர்பில் அறியக்கிடைத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் 25 வயதுடைய ஒக்கம்பிட்டிய பஹலகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் என கூறப்படுகிறது.

குறித்த நபர் நேற்று முன்தினாம் மொனராகல நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய நிலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்து வைக்க உத்தரவிட்டுள்ளது. (ஸ்ரீ-2)




மிருசுவில் -உசன் ஸ்ரீ கந்தசாமி ஆலய 108 வலம்புரி சங்காபிஷேக ஸ்கந்த ஹோமப் பெரு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கும்பவீதியுலா வருவதையும் மகாபூர்ணாகுதி அக்கினியில் இடப் படுவதையும் படங்களில் காண லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## உடல் எடை

இந்த உலகத்தில் 'அடிமைகள்' அதிகம். இந்த நூற்றாண்டில் கூட இப்படியா என்று ஆச்சரியப்படாதீர்கள்.

நான் சொல்ல வந்தது வேறு விடயம்..

'அன்புக்கு நான் அடிமை' என்று சொல்பவர்கள் எத்தனைபேர்? அதேபோல் போதைக்கு அடிமையானவர்கள் எத்தனைபேர்?

நம்ம நாட்டைப் பொறுத்தவரை நாக்குக்கு அடிமையானவர்கள் பலர் உண்டு.

சர்க்கரை வேண்டாமென்று டாக்டர் சொல்வார். ஆனால் சர்க்கரைதான் வேண்டுமென்று நாக்குச் சொல்லும். இவர்கள் நாக்கு என்ன சொல்கிறதோ அதன்படிதான் நடப்பார்கள். டாக்டர் சொல்வதுபோல் நடக்க மாட்டார்கள்.

ஒருவர் சாப்பிடும் உணவு அவர் செய்யும் வேலைக்கு போதுமானதா இல்லையா என்பதைக்காட்டும் அளவு கோல் தான் அவருடைய எடை.

தொடர்ந்து எடை கூடிக் கொண்டு போகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். என்ன அர்த்தம்? உணவின் அளவு உடம்பின் தேவையயைவிட அதிகம் என்று அர்த்தம். தேவைக்கதிகமாக சாப்பிடுகிறீர்கள் என்று அர்த்தம்.

ஒரு மேசைக்கரண்டி வெண்ணெய் மற்றும் ஒரு போத்தல் குளிர்பானம் இவையிரண்டிலும் 100 கலோரி சத்து இருக்கிறதாம்.

ஒரு நாளைக்கு இப்படி 100 கலோரி வீதம் அதிகமாகி விட்டால் ஒரு வருடத்தில் 5 கிலோ எடை கூடிவிடுமாம். மாப்பொருள், எண்ணெயில், பொரித்த பொருட்கள், இனிப்பு இவையெல்லாம் அதிகமாகச் சப்பிட்டால் கலோரி மதிப்பெண் கூடும். ஸ்கூட்டர், கார் என்பவற்றில் பயணம் செய்வது உட்கார்ந்தே வேலைகளைக் கவனிப்பது போன்றவற்றால் தசைகளின் இயக்கம் குறைகிறது.

எனக்குத் தெரிந்த வயதான பெரியவர் இருந்தார். அவருடைய உடம்பைப் பார்த்தீர்களானால் அவர் உண்மையிலேயே பெரியவர்தான் என்று நீங்களும் ஒத்துக் கொள்வீர்கள். 60 வயதுக்கு மேல் இருக்கும்.

அவருக்கு இப்பொழுதும் பிடித்தமான உணவுகள் என்ன தெரியுமா?

ஐஸ்கிறீம், ஜிலேபி, உருளைக்கிழங்கு இதனால் கொழுப்புச்சக்தி ஏறிக் கொண்டே போகிறது. கொழுப்புச் சக்தி குறைய வேண்டுமானால் உடல் பயிற்சி செய்யவேண்டும். மற்ற ஆகாரங்களின் அளவைக் குறைக்க வேண்டும். இல்லையென்றால் எடை கூடிக் கொண்டேபோகும்.

இதயநோய், சிறுநீரகக் கோளாறு, நீரிழிவு போன்றவற்றிற்கெல்லாம் இதுதான் மூலகாரணமாம். நோய் ஒரு பக்கம் இருக்க ... பார்ப்பதற்கு கஸ்டமாக இருக்கும். நடப்பதற்கு, ஓடுவதற்கெல்லாம் கஸ்டம். நடப்பதற்கே கஸ்டம் என்றால் ஓடுவது எப்படி?

இந்தக் காலத்திலெல்லாம் பஸ்ஸில் ஏறவேண்டுமானால்கூட ஓடிப்போய்த்தான் ஏறவேண்டியிருக்கிறது. நடந்துபோய் ஏறும் வரைக்கும் அது காத்துக் கொண்டிருப்பதில்லை. அப்படியிருக்கும்போது காலத்திற்கு தகுந்தாற்போல் உடம்பையும் கச்சிதமாக வைத்துக் கொள்ள வேண்டாமா?30, 40 வயதில் இந்த ஊளைச்சதை எல்லோருக்கும் சாதாரணமாக வரும்.

50 வயதுக்குள் இதை கட்டுப்படுத்திவிட வேண்டும். இல்லையென்றால் மனிதனின் ஆயுள் அரைவாசியாகக் குறைந்து விடுமாம்.

40, 45 வயதில் எடை 20 சதவீதம் அதிகமாக இருந்தால் 30 சதவீத ஆயுள் குறைந்து விடும். 50 வயதில் சராசரி மனிதனைவிட 25 கிலோ எடை அதிகமாக இருந்தால் 50 சதவீத ஆயுள் குறைந்துவிடும்.

பயமுறுத்துவதற்காக இந்த விபரத்தை சொல்லவில்லை. எல்லோரும் பத்திரமாக - பத்தியமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

மருந்துகளை சாப்பிட்டு திடீரென்று உடல் எடையைக் குறைத்துவிடுவதும் தவறு. சீராகத்தான் அதைக்குறைக்க வேண்டும். திடீரென்று குறைத்து விட்டால் உடம்பில் எதிர்ப்பு சக்தி குறைந்து விடும். அதன்பின் சுலபமாக வியாதி தேடிக் கொண்டு வந்து விடும்.

ஒரு குண்டான ஆசாமி வெளிநாட்டுக்குப் போயிருந்தார். அங்கு எடை அளக்கும் இயந்திரத்தில் ஏறி நின்று காசைப் போட்டார். உடனே உள்ளிருந்து ஒரு டிக்கெட் வந்து விழுந்தது. அதை எடுத்துப் பார்த்தார். அதில் "ஒரு நேரத்தில் ஒருத்தர் மட்டுமே ஏறி நின்று எடை பார்க்க வேண்டும்" என்று எழுதியிருந்தது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் அனைவருக்கும் தொழில் வழங்கப்படும்

### உயர் கல்வி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

இவ்வருடம் முதல் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறும் அனைவருக்கும் தொழில் வழங்கப்படுமென உயர்கல்வியமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

மட்டக்குளியில் உள்ள உயர் தொழில்நுட்பக் கல்வி நிலையத்தில் முதலாம் வருட மாணவர்களின் பெற்றோருடனான சந்திப்பின் போதே அவர் இந்த உறுதியை வழங்கியுள்ளார்.

அதேவேளை எந்தவொரு மாணவரும் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியில் சென்று ஆங்கில மொழி ரீதியான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலையோ தொழில்ரீதியாக அமைச்சர்கள் உட்பட ஏனையோரின் சிபாரிசுகளை பெற வேண்டிய அவசியமோ ஏற்படாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மாணவர்கள் தமது கல்வி பயிலும் காலத்தில் ஏனைய மாணவர்களுக்கு இடையூறு செய்யாமல் இருக்கும் மனப்பாங்கை கொண்டிருக்க வேண்டும்.

இதுவே பல்கலைக்கழகங்களை நிர்வகிக்க உதவியாக இருக்கும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சட்டவிரோத கல் அகழ்வில் ஈடுபட்டோருக்கு அபராதம்

(கரவெட்டி)

வடமராட்சி தொண்டைமானாறுப்பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி கல் அகழ்வில் ஈடுபட்ட 14 நபர்களை வல்வெட்டித்துறைப் பொலிசார் நேற்றையதினம் கைது செய்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

மேற்படி வழக்கைவிசாரித்த நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் சந்தேக நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 14 பேருக்கும் தலா 2ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

# முன்பள்ளிக் கட்டட திறப்பு விழா

போரூக் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட சிந்துபுரம் காந்திஜி முன்பள்ளி கட்டடத்திறப்புவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சிந்துபுரம் காந்திஜி சனசமூக நிலைய தலைவர் ப.சோழன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான மு. சந்திரகுமார், வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலர் திருமதி தே.பாபு, யாழ் போரூக் நிறுவனத்தை சேர்ந்த செல்வி நா.நந்தினி ,வலிமேற்கு பிரதேசசபை செயலர் க.புத்திசிகாமணி, வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.குனேசன், வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வி.பிரியங்கார தர்மதிலக, சைவவாலிபர் கழக மூத்த உறுப்பினரும் ஓய்வுபெற்ற விரிவுரையாளருமான அ.அரியரத்தினம், யா/வட்டு.திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபர் வீ.மீனேஸ்வரன், கிளிநொச்சி ஆசிரிய ஆலோசகர் தி.மோகனபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 200 | 200 |
| தக்காளி | 80-90 | 100 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | - | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 160 | 200 | 160 |
| பூசணி | 50-60 | 60 | 80 | 70 |
| புடோல் | 60 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 70-80 | 80 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 120 | 130 | 140 | 130 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | - | 80 | - | - |
| பயற்றங்காய் | 100 | 100 | 140 | 130 |
| லீக்ஸ் | 100 | 130 | 140 | 140 |
| பீற்றூட் | - | 60 | 80 | 50 |
| கறிமிளகாய் | - | 200 | 200 | 150 |
| முருங்கைக்காய் | 300 | 600 | 600 | 50 |
| போஞ்சி | 100 | 120 | 140 | 130 |
| கத்தரிதம்புள்ள | - | 50 | 100 | 130 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 50 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 50 |

# இராசி பலன்

17.03.2011

(பங்குனி 03,வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு

துவாதசி காலை 7.13 மணிவரை

திரயோதசி பின்னிரவு 5.04 மணிவரை

ஆயிலியம் பிற்பகல் 1.44 மணிவரை

இராகு காலம் 1.49-3.19 மணிவரை

சுபநேரம் 7.49- 9.19 மணிவரை

பிரதோச விரதம்

**மேடம்** இனிமையான நாள், பிள்ளைகளால் பெருமை சேரவேண்டிய நாள், இல்லம் தேடி சுப செய்திகள் வந்து சேரும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**இடபம்** தாய்வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும், ஈசன் வழிபாட்டால் இன்பங்கள் சேரும் நாள், அஞ்சல் வழியில் ஆச்சரியமான செய்திகள் வந்து சேரும்.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்,தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், உறவினர்வழியில் உதவிகள் கிடைக்கலாம், பணவரவு திருப்தி தரும்.

**கடகம்** புதிய பொருட் சேர்க்கையுண்டு, பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும் வாக்கு மேண்மையுண்டு,

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற சிவனை வழிபடவேண்டிய நாள், நண்பர்கள் ஒழிவுமறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, புதிய அனுபவங்களைப் பெறுவீர்கள்.

**கன்னி** சுப செலவுகள் அதிகரிக்கும், பரம்பொருளை வழிபட்டு ஆனந்தம் காணவேண்டிய நாள்,பயணங்களால் அலைச்சல் ஏற்பட்டாலும் சிறு ஆதாயம் கிடைக்கலாம்.

**துலாம்** எதிர்கால முன்னேற்றத்திற்கு திருப்புமுனையான நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், விரதம், வழிபாடுகளில் ஆர்வம் கூடும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும், பயணங்களால் பலன் கிடைக்கும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**தனுசு** சாமர்த்தியமாக பேசி சாதனை படைக்கும் நாள், அரைகுறையாக நின்ற வேலையை ஒவ்வொன்றாக செய்து முடிப்பீர்கள், உறவினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் குறையும்.

**மகரம்** கவலைகள் தீர பார்வதிமணாளனை வழிபடவேண்டிய நாள், சிலர் பாராட்டுவதுபோல உங்களை விமர்சிக்கலாம், அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் நாள், சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**மீனம்** சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள்,கொடுக்கல்- வாங்கல் ஒழுங்காகும்,உடல் நலனில் உற்சாகம் பிறக்கும், தொழில் விருத்தியடையும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

08

## மருந்திற்கு எதிர்ப்பு தன்மை உடைய காசநோய்

மருந்திற்கு எதிர்ப்புத் தன்மையுடைய காசநோய் கிருமியினை ஆய்வு கூடத்தில் கண்டறிதல்

1. திண்ம வளர்ப்பு ஊடகம்(Solid)
2. திரவ வளர்ப்பு ஊடகம்(Liquid)
3. நுணுக்குக் காட்டி ஊடான நுண் வளர்ச்சி அவதானிப்பு

மருந்திற்கு எதிர்ப்புடைய காசநோயினைத் தடுத்தல். நேரடி கண்காணிப்பிலான சிகிச்சை. இதற்கு பின்வருவனவற்றினை தவிர்த்தல் வேண்டும்.


1. முறையற்ற மருந்துகளின் சேர்மானம்
2. சரியான அளவில் மருந்து எடுக்காமை
3. சரியான காலத்திற்கு மருந்து உட்கொள்ளாமை
4. மருந்துகளின் தரம் குறைவு கொடுக்காமை
5. சரியான மருந்துகளை ஒழுங்காக எடுக்காமை

### மனிதனின் சுவாசத்தொகுதியின் அமைப்பும் தொழிற்பாடும்

மனிதனின் சுவாச அங்கம் நுரையீரல் (சுவாசப்பை) ஆகும். சுவாசப்பைகளையும் அவற்றோடு தொடர்பான வளி செல்லும் பாதையையும் கொண்டதே மனிதனின் சுவாசத்தொகுதியாகும். இது வலது , இடது என இரு சுவாசப்பைகளை கொண்டுள்ளது. இவை நெஞ்சறைக்குழியில் நடுக்கோட்டிற்கு இரு பக்கத்திலும் இதயத்திற்கு அண்மையில் காணப்படும். சுவாசப்பைகள் , இதயம் ஆகியவற்றை 12 சோடி விலா என்புகள் பாதுகாக்கின்றன. நெஞ்சறையையும் வயிற்றறையையும் பிரித்து பிரிமென்தகடு எனப்படும் மென்சவ்வு காணப்படும்.

மூக்குத் துவாரத்தின் ஊடாக செல்லும் வளி ,தொண்டை, குரல்வளை, வாதநாளி, சுவாசப்பைக்குழாய் எனும் பாதையினூடாக சுவாசப்பைகளை சென்றடையும். சுவாசப் பையினுள் சுவாசப்பைக் குழாய், சுவாசப்பை சிறுகுழாய்களாக பிரிந்து செல்லும். பின்னர் இவை மேலும் பிரிவடைந்து சிறு குழாய்களாகி சுவாசப்பை சிற்றறைகளில் முடிவடையும்.

*சிற்றறையினுள் வாயுப் பரிமாற்றம் நடைபெறும் முறையை காட்டும் வரிப் படம்.*



சுவாசப் பைகளைச் சுற்றி இரு புடை மென்சவ்வுகள் காணப்படுகின்றன. சுவாசப்பை சுவர்களின் ஊடாக நெஞ்சறைக்குழியில் வளி கசிவதனை இது தடுக்கிறது. மேலும் நெஞ்சறைக்குழிக்கும் சுவாசப் பைகளுக்கும் இடையிலான உராய்வையும் இது குறைக்கும். இம் மென்சவ்வுகளுக்கிடையில் புடைக் குழிபாய்மம் காணப்படுகின்றது. இப்பாய்மம் உராய்வு நீக்கியாக தொழிற்பட்டு சுவாசத்தின் போது இரு மென்சவ்வுகளும் ஒன்றுடன் ஒன்று உராய்வதனை தடுக்கிறது.

### சுவாசப் பொறிமுறை

நெஞ்சறையில் உள்ள பழுவுக்கிடையிலான தசைகளினதும் பிரிமென்தகட்டு தசைகளினதும் தொழிற்பாட்டினால் சுவாசப் பைகளினுள் வளி உள்ளெடுக்கப்பட்டு பின்னர் வெளிவிடப்படுகிறது.

### உட்சுவாசம்

சுவாசப் பைகளினுள் வளி செல்லுதல் உட்சுவாசம் எனப்படும். உயிர்ப்பான செயல் முறையாகும். அதன் படிமுறைகளின் ஒழுங்கு வருமாறு,

+ பழுவுக்கிடையான தசைகளின் சுருக்கத்தால் விலா என்புகள் மேல் நோக்கியும் வெளிநோக்கியும் தள்ளப்படும்.
+ பிரிமென்தகட்டு தசைகளின் சுருக்கத்தால் பிரிமென்தகட்டின் வளைவு குறைவடையும்.
+ இவ்விரு செயற்பாடுகளின் காரணமாக நெஞ்சறையின் கனவளவு அதிகரிக்கும்.
+ இதன் விளைவாக நெஞ்சறையினுள் உள்ள சுவாசப்பைகளினுள் அமுக்கம் குறைவடையும்.
+ வெளியிலிருந்து வளி சுவாசப்பாதையூடாக சுவாசப் பைகளினுள் உள்ள சிற்றறைகளினுள் செல்லும். சுவாசப் பைகளினுள்ளே காணப்படும் அமுக்கம் வளிமண்டல அமுக்கத்திற்கு சமனாகும் வரை வளி உட்செல்லும். உட்சுவாச வளியிலுள்ள ஒட்சிசன் கலச்சுவாசத்திற்கு பயன்படுத்தப்படும்.

### வெளிச்சுவாசம்

சுவாசப் பைகளில் இருந்து வளி வெளியேற்றப்படுவது வெளிச் சுவாசம் எனப்படும். இது உயிர்ப்பற்ற செயல் முறையாகும். வெளிச்சுவாசம் பின்வரும் ஒழுங்கில் தொழிற்படுகின்றது.

+ பழுதுக்கிடையிலான தசைகள் தளர்வதால் விலா என்புகள் உள்நோக்கியும் கீழ்நோக்கியும் இழுக்கப்பட்டு மீண்டும் பழைய நிலையை அடையும்.
+ இதேவேளை பிரிமென்தகட்டுத் தசைகள் தளர்வடைவதனால் அது மீண்டும் குவிந்த நிலைக்கு வரும்.
+ இவற்றின் காரணமாக நெஞ்சறையின் கனவளவு குறைவடையும். அப்போது வளிமண்டல அமுக்கத்தைவிட சுவாசப்பையினுள் அமுக்கம் அதிகரிப்பதனால் வளி , சுவாசப் பைகளிலிருந்து சுவாசப் பாதையூடாக வெளியேறும்.

சுவாச சிற்றறைகளினுள் காணப்படும் மயிர்த்துழைக் குழாய்களின் விட்டம் செங்குருதிக் கலங்களின் விட்டத்தைவிட குறைவானது. ஆகவே, குருதிமயிர்க் குழாய்களினூடாக குருதி செல்லும் போது செங்குருதிக் கலங்கள் சுருங்கிய குடையைப் போன்று சுருங்கிய வாறு செல்லும். சுவாசச் சிற்றறையினுள் குருதி மிக மெதுவாகவே செல்வதால் வாயுப்பரிமாற்றத்திற்கு போதிய அவகாசம் கிடைக்கும்.

(தொடரும்)



Dr.சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

# பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ஏற்க முடியாது

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

இதுவரை ஓய்வூதிய திட்டத்தினுள் சேர்க்கப்படாதுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு என உருவாக்கப்பட்டுள்ள ஓய்வூதிய திட்டத்தை ஏற்க முடியாது என சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கூறியுள்ளனர்.

சமுர்த்தி ஊழியர்கள் ஊழியர் சேமலாபநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் அக்கத்தவராக இருப்பதாகவும் அதை நிறுத்திவிட்டு புதிய ஓய்வூதிய திட்டத்தை அமுலாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது எனவும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கூறியுள்ளனர்.

நாம் ஏமக்கு ஓய்வூதிய திட்டமொன்றையே ஏற்றுக் கொண்டோம். ஆனால் அரசாங்கம் வேறு ஏதோ ஒரு திட்த்தை கொண்டு வரவுள்ளது என சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்க பொதுச் செயலாளர் சாமர மதுமகளுகே தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் ஓய்வூதிய திட்டத்தை எதிர்ப்பதற்கு அரசியல் வேறுபாடின்றி சகல தொழிற் சங்கங்களும் ஐக்கியப்படும். எம்மோடு எதுவுமே பேசப்படவில்லை. அப்படியாயின் புதிய ஓய்வூதிய திட்டத்திற்கு நாம் எவ்வளவு பங்களிப்பு செய்ய வேண்டும் என்பதும் எமக்குத் தெரியாது என அவர் தெரிவித்தார்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்காக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவுள்ளதாக தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ஸ்ரீ-2)

# ஆழ்கடலில் மீன்பிடிக்க அதிசக்திவாய்ந்த ஆயிரத்து நாநூறு படகுகள் கொள்வனவு

## அமைச்சர் ராஜித தகவல்



ஆழ்கடல் மற்றும் சர்வதேச கடல் எல்லையில் மீன்பிடிப்பதற்காக ஆயிரத்து 400 அதிசக்திவாய்ந்த படகுகளை கொள்வனவு செய்யவுள்ளதாக கடற்றொழில் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் கலாநிதி ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

சவுதி அரேபியாவின் அல்பைஸால் நிறுவனத்துடன் இதற்கான வர்த்தக உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப் பட்டுள்ளது.

அதன்படி , அந்த நிறுவனம் வழங்கும் 300 மில்லியன் அமெரிக்க டொலர் மூலம் குறிப்பிட்ட படகுகளை கொள்வனவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் முதற்கட்டமாக இவ்வருடம் 400 படகுகளும் இரண்டாம் கட்டமாக அடுத்த வருடம் ஆயிரம் படகுகளும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)








யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வான இசையும் அசைவும் நிகழ்வையும் வெற்றியீட்டிய இல்லத்திற்கு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள் :-என்.குமார்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்



65



கவிப்பேரரசு வைரமுத்து

"யப்பா வெட்டிக்கிட்டாலும் குத்திக்கிட்டாலும் நாமெல்லாம் ஒரே மண்ணுல பொறந்து ஒண்ணா வளந்தவுக. நம்ம ஆளுக சிந்தவேணாம்; சிதறவேணாம்; இந்த மண்ணவிட்டு எந்த மண்ணுக்குப் போனாலும் ஒண்ணாவே போவோம்; ஒண்ணாவே இருப்போம். பொழைச்சா எல்லாரும் ஒண்ணாப் பொழைப்போம்; செத்தா எல்லாரும் ஒண்ணாச் சாவோம்."

சரியான முடிவுன்னு ஊரே தலையாட்டுச்சு.

"எல்லாஞ் சரிதானப்பா. வீட்ட எழந்து போறோம்; காட்ட எழந்து போறோம். ஆண்டாண்டு காலமா நம்மள காப்பாதின அங்காள பரமேஸ்வரிய எப்படி ஆத்துல விட்டுட்டுப் போறது? சாமி நம்மளக் காப்பாத்தினது ஒரு காலம்; சாமிய நாம காப்பாத்துறதும் ஒரு காலமா இல்லையா?"

ஊர்ல இது வரைக்கும் பேசாத பெரிய நாயக்கரு வாய்தெறந்து பேசின பேச்சு நியாயமான பேச்சுன்னு ஊரே 'உச்'சுக் கொட்டி நின்னுச்சு.

ஊரைக்காலிபண்றதுக்கு முன்னால ஒரு நாள் நல்ல நேரம் பாத்து சாமிகும்பிட்டு பூசாரியக் கூப்பிட்டுப் பொங்கலும் வைச்சு "குத்தங்குறை இருந்தா எங்களை மன்னிச்சுரு தாயே"ன்னு அம்மனுக்கு ஒரு மனுவும் குடுத்து ஊரே கூடிக் குலவை போட்டுக் கோயில்லயிருந்து பேத் தெடுத்தாக சாமிய. சும்மா ரெண்டு கையிலயும் வேப்பங் கொழைய வச்சுக்கிட்டு, பூசாரி அருள் வந்து ஆடினாரு பாருங்க அன்னைக்கு... ஒங்க வீட்டு ஆட்டம் எங்க வீட்டு ஆட்டம் இல்ல. அவுந்த வேட்டியமட்டும் அடிக்கடி கட்டிக்கிட்டு அழகாத்தான் ஆடினாரு.

"ஆத்தா! நாங்க போற எடத்துல பொழச்சுக்கிருவமா?"

ஊரே பூசாரிகிட்டக் குறிகேக்கக் காத்திருக்க அவரை நக்கல் பண்ணவும் நாலுபய இருந்தான்.

"வாங்கிவந்த சாராயம் வழியில கொட்டிப் போச்சுன்னு மட்டும் ஒரு தகவல் சொல்லிப்பாரு. பூசாரிக்கு உண்மையான அருளும் ஆவேசமும் அப்பறம் வரலேன்னா என்னிய என்னான்னு கேளு."

ஊரே வெறிச்சுன்னு போச்சு காக்கா குருவி மட்டும் சொந்தக்காரன்களக் காணோமேன்னு அங்கிட்டும் இங்குட்டுமாப் பறந்து பறந்து அலை யுதுக.

சுமக்கக்கூடியத தலையில சுமந்து ஏத்தக்கூடியத வண்டியில ஏத்தி, சாமியக் கும்பிட்டு அழுது போறாக சக்கரபட்டி ஆளுக. ஒரு கட்டவண்டியில அங்காள பரமேஸ்வரி சிலை- ஓரமா ஒரு மொளைக் குச்சியப் புடிச்சு ஒக்காந்து போறா கண்ணு தெரியாத கொண்டம்மா அங்காள பரமேஸம்வரி மேல உக்காந்து போகுது அவ ஆசையாப்பொத்திப் பொத்தி வளத்த பொட்டக் கோழி.

பசுக்காரன்பட்டிக் கருத்தராசு அந்த சாராங் கத்துலயே பெரிய பொழைப்பு பொழச்சவரு. நஞ்சை புஞ்சையின்னு ஏகத்துக்கு விவசாயம். காரவீட்டுக்காரரு. அவரு வீட்டு வாசல்ல தவிச்சுப்போயி தலையத் தொங்கப்போட்டு எவன் போயி நின்னாலும் கூழோ, கஞ்சியோ ஊத்தி அஞ்சோ பத்தோ குடுத்துத்தான் அனுப்புவாரு. அப்பேப்பட்ட ஆளும் உள்ளத எடுத்துக்கிட்டு ஊர விட்டுப்போறாரு. உரலு, ஒலக்கை, அம்மிக்கல்லு, ஆட்டுக்கல்லு, தோலான் துருத்தி எல்லாத்தையும் ஏழெட்டு வண்டியில ஏத்தி அனுப்பிட்டு, கடைசியா இடிக்கப் போயிருக்காரு கதவு ஜன்னல. தடுத்து நிறுத்திட்டாக தாசில்தாரு ஆளுக. எம்பொருள எடுக்கிறேன்; எவன்டா தடுக்கிறவன்னு கேட்டா, "அய்யா! என்னைக்குக் கை நீட்டி நஷ்ட ஈடு வாங்கிட்டீகளோ அன்னைக்கே வீடு அரசாங்கத்துக்குச் சொந்தம். கலப்பை எடுத்துக்குங்க மம்பெட்டி எடுத்துக்குங்க தட்டுமுட்டுச்சாமான் எடுத்துக்குங்க. கதவு நெல ஜன்னலத் தொடாதீங்க கட்டை விட்டம் தொடாதீங்க அது எங்க சொத்து. ஏலம் விடுவோம். கடைசிவரைக்கும் என்னென்னவோ பேசிப் பாத்தாரு கருத்தராசு கேக்கல. சர்க்கார் ஆளுகளுக்கு வாய்தான் இருக்கும்; காது இருக்காது.

கடைசியாக்கோபம் வந்து "போங்கடா நீங்களும் உங்க சட்டமும்"ன்னு சொல்லி கடப்பாரைய எடுத்து ஒரே குத்து கதவுல குத்திட்டு ஓடிப் போயிட்டாரு கருத்தராசு.

பசுக்காரன் படியில கடப்பாரை எடுத்துக் கருத்தராசு கதவுல குத்தின குத்து கள்ளிப்பட்டியில் இருந்த பேயத்தேவர் நெஞ்சுல வந்து 'டங்'குன்னு விழுந்திச்சு.

"இதென்னடா இது... சர்க்காரு துரும்பைக் குடுத்துத் தூணப்புடுங்குது. வீட்டுக்கு நஷ்டஈடு வாங்கிட்டா, அசையும் பொருள் வீட்டுக் காரனுக்காம்; அசையாப் பொருள் அரசாங்கத்துக்காம். விட்டுட்டுப்போற அடிமனைக்குத்தானப்பா நஷ்டஈடு. பொருளுக்குமா? கேக்கவேண்டிய எடத்துல கேட்டுற வேண்டியது தான்."

பெரியகுளம் தாசில்தார் ஆபிசுக்குப் புறப்பட் டாரு பேயத்தேவர். செவத்த வீரனையும் பித்துக் காலுப் பெருமாளையும் கூடவே கூப்பிட்டுக் கிட்டாரு.

ஒருமாசமா எடுக்காத தாடிவெள்ள வெளேர்ன்னு வெளிய நீட்டிக்கிட்டு இருந்துச்சு, அதை எடுக்கவும் தோணல. இருந்துட்டுப் போகுது. பாவம்! அதென்ன சொத்தை எழுதி வையுங்குதா? இல்ல குடிக்கிற கஞ்சியில பங்கு கேக்குதா? உரம் போடாம வளர்றது அது மட்டும் தான். மூஞ்சிக்குக் காவலா இருந் திட்டுப் போகுது கழுத!

வெள்ளைக்குப் போட்ட வேட்டி வரல. சிவீர்னனு செம்மண் புடிச்சிருந்தது கட்டியிருந்த நாலுமுழ வேட்டி. அவருக்கே பொறுக்கல. ஒரு நாடு நகரத்துக்குப் போறப்ப நல்லது கெட்டதுக்குப் போறப்ப வெள்ளையுஞ் சொள்ளயுமாப் போகவேணாமா? உடுத்திருந்த வேட்டியப் பெலமா உதறிப் பெரட்டிக் கட்டினாரு; குனிஞ்சு பாத்தாரு. ஏற்கனவே இருந்த பக்கம் இத விட வெள்ளையா இருந்திச்சு. திருப்பியும் அதப் பெரட்டிக் கட்டலாமா வேணாமான்னு மாறிமாறி யோசிச்சு மண்ட காஞ்சு போனாரு. கடைசியில "எல்லாம் ஒண்ணுதான். இப்படியே இருக்கட்டும். இனிமே எவனும் எனக்குப் பொண்ணு கொடுக்க வேணாம்"னு வம்பாடுபட்டு மனசைத் தேத்திக்கிட்டாரு. நல்ல ஊருதான் பெரியகுளம்; வெயிலடிச்சாலும் வேர்க்காது. மத்தியானம் ஆகிப்போச்சு. வகுத்துக்குள்ள பசி அங்கிட்டும் இங்கிட்டும் சடுகுடு ஆடுது. பெரியகுளம் வரைக்கும் வந்திட்டு அய்யர் கடையில சாப்பிடாமல் போறவன் ஒரு மனுசனா? பெருஞ்சாப்பாடு சாப்பிடலாம். பெரும் சாப்பாடு முக்காரூவா, கூட வந்த ஆளுகள சேத்தா மூணு சாப்பாடு மும்முக்கா ரெண்டே கால். தாங்குமா? அளவுச் சாப்பாடுன்னா மூவரை ஒன்றரை; யோசிக்கலாம்! பலகாரம் காப்பியோட முடிச்சுக்கிட்டா மூணுகா முக்கா. இந்த மூணுல என்ன முடிவெடுக்கலாம்ன்னு பையில கைய விட்டுத் தூர்ல கெடந்த காசைப் பிதுக்கிப் பிதுக்கி இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்கு யோசிச்ச மாதிரி யோசிச்சாரு பேயத்தேவரு. மனசுக்கும் காசுக்கும் மல்யுத்தம் நடக்குது ரொம்ப நேரமா.

உழுத நெலமே இல்லேன்னு போகப் போகுது; ஊரே இல்லேன்னு போகப்போகுது. இதுல அஞ்சுபத்து கணக்குப்பாத்து ஆயிரம் வருசமா பொழைக்கப்போறோம்? ஆனது ஆகட்டும். பெருஞ்சாப்பாடுதான் சாப்பிடறதுன்னு துணிஞ்சிட்டாரு பேயத்தேவர்.

அய்யர் கடைச்சாப்பாடும் சாப்பிட்டு, வெத்தலைபாக்குப் போட்டுத் துப்பிக்கிட்டே பொடிநடையா நடந்து தாசில்தாரு ஆபிசுக்குப்போனா அங்க ஒரே போலீசா நிக்குது; வெட்டுப்பழி குத்துப்பழியாகிக் கெடக்கு.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்




(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)

*ஆழ்ந்த யோசனையாலும் அருமையான உழைப்பாலும் முன்னேற்றம் காணும் மேடஇராசி நேயர்களே!*

பிறரை தங்களுடைய காரியத்திற்கு பயன்படுத்திக்கொள்ளும் நுட்பத்தைக் கற்றவர்கள் நீங்கள். புதிய காரியம் செய்வதைக் காட்டிலும், புண்ணிய காரியம் செய்ய வேண்டும் என்று சொல்வீர்கள். சக்தி வாய்ந்தவர்களாக நீங்கள் விளங்கினாலும், பக்தி மார்க்கத்திற்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுப்பதால்தான் பல காரியங்களிலும் உங்களுக்கு வெற்றி கிடைக்கிறது.

உங்களுக்கு இந்த மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்திலேயே இராசிநாதன் செவ்வாய் இலாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் வருமானம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக வந்து கொண்டிருக்கும்.

அதேநேரத்தில் விரயாதிபதி குரு, 3 மற்றும் 6க்கு அதிபதியான புதனுடனும், புத்திரஸ்தானாதிபதியான சூரியனுடனும் கூடிச் சஞ்சரிப்பதால், பிள்ளைகள் வழியிலும், உடன்பிறப்புக்கள் வழியிலும் சிறு விரயங்கள் ஏற்பட்டு அகலும்.

இம்மாதக் கடைசியில் செவ்வாய் மீனத்தில் சஞ்சரித்த பின்னர், சில நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரப்போகிறது.

குறிப்பாக, விபரீத இராஜயோகம் செயற்படப் போவதால், இதுவரை நடைபெறாது என நினைத்த காரியம் ஒன்று இப்பொழுது நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கப் போகிறது. அதேநேரத்தில் செவ்வாய், சனியின் பார்வை இருப்பதால், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்படாமல் இருக்க, அங்காரக வழிபாட்டையும், அர்த்தநாரீஸ்வரர் வழிபாட்டையும் அவசியம் மேற்கொள்வது நல்லது.

இம்மாதம் 23 ஆம் திகதி கும்பஇராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 2, 7க்கு அதிபதியான சுக்ரன் இலாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, குடும்ப வருமானம் கூடும். குழந்தைகள், வாழ்க்கைத்துணை வழியே வரவு வந்துசேரும். வேலைக்கு விண்ணப்பிக்கும் நேர்முகத் தேர்வுக்கு யாரும் அழைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இப்பொழுது உத்தியோகம் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி மீனஇராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் விரயஸ்தானத்தில் சஞ்சரித்தாலும், அது அஷ்டமாதிபதியாக இருப்பதால், விபரீத இராஜயோக அடிப்படையில், சில காரியங்களை துரிதமாக நடத்தி வைக்கும் சூழ்நிலை உருவாகும். கடந்த மாதத்தில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்யும். திடீர் திடீரென ஏற்படும் செலவுகளுக்கு ஒரு வருமானத்தை வரவழைத்துக் கொடுக்கும். பொருள் விற்பனையால் இலாபமும், பூமி வாங்கும் யோகமும் உண்டு.

இம்மாதம் செவ்வாய், சனியின் நேரடிப் பார்வையால் சிக்கல்கள் ஏற்படாமல் இருக்க, கந்தசஷ்டி கவசம்பாடி முருகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் உறவினர் பகை அகலும். உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். ஊர் மாற்றச் சிந்தனைகளை தவிர்ப்பது நல்லது. இம்மாதம்24க்கு மேல் உடல்நிலையில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகும். அசதி, இரத்த அழுத்தம், எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புக்கள் ஏற்படாமல் இருக்க மருத்துவ ஆலோசனையைப் பெறுவது அவசியம். தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடு திருப்திகரமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.




(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம்1,2 ஆம் பாதங்கள்)

*மற்றவர்கள் மனம் புண்படாமல் பேசி உற்றார், உறவினர்களையும் அரவணைத்துச் செல்லும் ரிஷபஇராசி நேயர்களே!*

தித்திக்கும் வாழ்க்கையாக இருந்தாலும், தியாக வாழ்க்கைதான் உங்கள் வாழ்க்கை. எத்திக்கிலும் உங்கள் புகழ் கொடிகட்டிப் பறக்கும். ஆனால், இல்லத்தில் உள்ளவர்களால் மட்டும் ஏதேனும் பிரச்சினைகள் எழுந்து கொண்டே இருக்கும். மனதில் எவ்வளவு கவலை இருந்தாலும், மலர்ந்த முகத்துடன் காட்சி கொடுப்பீர்கள். தினமும் தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

உங்களுக்கு இந்த மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் சுக்ரன் ஒன்பதில் சஞ்சரிப்பது யோகம்தான். பணப்புழக்கம் அதிகமாகவே இருக்கும். பக்கபலமாக இருப்பவர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். பயணங்கள் அதிகரிக்கும். இலாபஸ்தானாதிபதியும், தனாதிபதியும் ஒன்றாக இணைந்து நீச பங்க இராஜ யோகத்தை உருவாக்குவதால் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். இனத்தார் பகை அகலும்.

இல்லத்தில் உள்ள குழந்தைகளின் நலன்கருதி எடுத்த முயற்சியிலும் வெற்றி கிடைக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப் போடு, அனைத்துக் காரியங்களையும் மாதத்தின் மையப் பகுதியில் முடித்துக் காட்டுவீர்கள்.

சுக்ரன் உங்கள் இராசிநாதனாகவும், ஆறுக்கு அதிபதியாகவும் விளங்குகிறார். அப்படிப்பட்ட சுக்ரன் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்பொழுது மிகுந்த நற்பலன்களை அள்ளி வழங்குவார். இதுவரை எதிர்பார்த்துக் காத்திருந்த உத்தியோக உயர்வும், ஊதிய உயர்வும் இப்பொழுது கைகூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். தொழிலில் பங்குதாரர்கள் தரவேண்டிய தொகையில் பாதியையாவது கொண்டு வந்து கொடுப்பர். விரயாதிபதி செவ்வாயுடன் சுக்ரன் கூடுவதால், வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் கூடும். அத்தியாவசியப் பொருட்கள் முதல், ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

இதுவரை கும்பத்தில் சஞ்சரித்து வந்த செவ்வாய் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் மீனத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, பழைய சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகலாம். விலகிச் சென்ற உடன்பிறப்புக்கள் விரும்பி வந்திணைவர். நீண்ட தூரத்தில் இருக்கும் நண்பர்கள் உங்கள் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வர்.

இம்மாதம் வைரவர் வழிபாட்டை நீங்கள் முறையாக மேற்கொண்டால், வளர்ச்சி மீது வளர்ச்சி ஏற்படும். வெள்ளிக்கிழமை செய்யும்

**சிவல்புரி சிங்காரம்**

வழிபாட்டால் விருப்பங்கள் நிறைவேறும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் வரவும்- செலவும் சமனாகும் மாதமாக அமையப் போகிறது. குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வதுதான் நல்லது. கணவன் அன்பிற்குப் பாத்திரமாக இருந்தாலும்கூட, வீட்டுப் பெரியவர்களின் ஆலோசனைகளையும் கேட்டு நடப்பது நல்லது. சுக்கிர பெயர்ச்சியின் விளைவாக, ஆபரணச் சேர்க்கை உருவாகும். வக்ரச் சனியின் இயக்கத்தால் குழந்தைகள் வழியில் சில பிரச்சினைகள் உருவாகலாம். எனவே, சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும், செவ்வாய் முருகப்பெருமான் வழிபாட்டையும் மேற்கொண்டால், மன அமைதி கிட்டும்.

(தொடரும்)

## நாடளாவிய ரீதியில் வாழைநார் உற்பத்தி

வாழைநார் உற்பத்தியை விரைவில் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் வாழைநார் சார்ந்த கைத்தொழில் உற்பத்திகளை இந்தியத் தொழிற்றுறை சார்ந்த வல்லுநர்களின் ஆதரவுடன் மேம்படுத்துவது தொடர்பில் விளக்கம் அளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு ஏற்ப 10 இலட்சம் மனைப்பொருளியல் அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைவாக கிராமப்புற மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் இந்திய அரசு ஆகியன இதற்கு உதவி வழங்குகின்றன. இதன்மூலம் சுற்றாடல் பாதுகாக்கப்படுவதுடன் வறிய மக்களின் பொருளாதார நிலையும் மேலோங்குகிறது. மேலும் சுயதொழில் வாய்ப்பும் ஏற்படுகிறது என்றார். (ஸ்ரீ-2)

**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான்**
**ஆலய பொங்கல்விழாவை முன்னிட்டு**
**பக்தர்களுக்கான பாதுகாப்புப் பிரிவினரின் அறிவித்தல்**

நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழாவுக்கு வருகைதரும் பக்தர்கள் குறிப்பாக பெண் பக்தர்கள் தயவு செய்து தங்கள் பாதுகாப்புக்கருதி தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.




இவ்வண்ணம்
ஆலய பரிபாலன சபை

(4-2688)



வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் நேற்று முன்தினம் அடைக்கலமாதா கோவில் தையற் பயிற்சி நிலையத்தில் தையல்- மனையியல் -அழகியல் பொருட்கள் கண்காட்சி இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும், யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பயிற்சிபெறும் மாணவிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணத்தில் முதலாவது எரிவாயு மூலம் உடற்தகனம் செய்யும் சாதனம் நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டும் விழா அண்மையில் வவுனியா பூந்தோட்டம் இந்து மயானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தலைவர் ஜ.க. திருவிளங்கம் அடிக்கல் நாட்டுவதனையும் வவுனியா நகரசபையின் உப தலைவர் எம்.எம்.ரதன் உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## மன்னாரில் ரூ.450 மில்லியன் செலவில் தொழிற்பேட்டை

மன்னார் மாவட்டத்தில் 450 மில்லியன் ரூபாய் செலவில் கைத்தொழில் பேட்டை ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர மண்டபத்தில் மன்னார் மாவட்டத்தில் தையல் பயிற்சிகளை நிறைவு செய்து கொண்ட 400 யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் 100 மில்லியன் ரூபாய்களும் வவுனியா வடக்கில் 1000 மில்லியன்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 3000 மில்லியன்களும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளன.

இதேவேளை மதவாச்சி தொடக்கம் மடு வரையான முதற்கட்ட புகையிரதப் பாதை மற்றும் மடு தொடக்கம் தலைமன்னார் வரையான புகையிரதப் பாதை புனரமைப்புக்கு 3500 மில்லியன்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான முதற்கட்டப் பணிகள் தற்போது இடம்பெற்ற வண்ணமுள்ளன.

வன்னி மாவட்டத்தை கைத்தொழில் பேட்டைகள் கொண்ட கிராமமாக மாற்றும் திட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரம் யுவதிகள் வேலை வாய்ப்பைப் பெறவுள்ளனர். இவர்கள் மாதாந்த வருமானமாக 15 ஆயிரம் ரூபாவினைப் பெற்றுக்கொள்வர்.

மன்னார் மாவட்டத்தில் 10 ஆயிரம் இளைஞர், யுவதிகளும் முல்லைத்தீவில் 15 ஆயிரம் இளைஞர், யுவதிகளும் வவுனியாவில் 7 ஆயிரம் இளைஞர், யுவதிகளும் தொழிலை எதிர்பார்த்துள்ளனர் என்றும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## முல்லைத்தீவில் விடுதலைப்புலிகளின் குண்டு தயாரிக்குமிடம் கண்டுபிடிப்பு

முல்லைத்தீவு உடையார்கட்டில் சக்தி வாய்ந்த குண்டுகளுடன் விடுதலைப்புலிகளின் குண்டு தயாரிக்குமிடம் ஒன்று விசேட அதிரடிப்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. கடந்த 14ஆம் திகதி விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே பிரஸ்தாப இவ் இடம் கண்டுபிடிக்கப்பட்டதாக விசேட அதிரப்படையின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உடையார்கட்டின் வனாந்தர பிரதேசத்தில் கைவிடப்பட்டநிலையில் காணப்பட்ட மேற்படி இடத்தில் தயாரித்து முடிக்கப்பட்ட குண்டுகள் மட்டுமன்றி அதற்கான மூலப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட குண்டுகளில் அதிசக்தி வாய்ந்த கிளைமோர் கண்ணிவெடிகள்-7, கைக்குண்டுகள்-47 என்பனவும் மேலும் பெரும் தொகையான துப்பாக்கி ரவைகளும் காணப்பட்டதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## நல்லூர் கோட்ட பரிசளிப்பு விழா

நல்லூர்க் கோட்ட மெய்வல்லுநர் போட்டியின் இரண்டாம் நாள் பரிசளிப்பு நிகழ்வு இன்று வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு யா/கொக்குவில் இந்துக் கல்லூரி நாகலிங்கம் மைதானத்தில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இ.ச.பே. சக நிறுவன உரிமையாளர் லயன் இ.ச.பே.நாகரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக வலம்புரி பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் சி.வெற்றிவேலாயுதம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக திருநெல்வேலி கண்ணன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் ந.ஸ்ரீஸ்கந்தராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ஸ்ரீ-9)

## புலிகளின் முக்கியஸ்தருக்கு தஞ்சமளித்த குற்றச்சாட்டில் கைதானவருக்கு பிணை

விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் மறைந்து வாழத் தஞ்மளித்த குற்றச்சாட்டின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சந்தேக நபர்களில் ஒருவரை பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரஸ்தாப குற்றச்சாட்டில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நடேசன் ஜனார்த்தன் என்பவருக்கே பிணையில் செல்ல அனுமதி வழங்குமாறு கல்கிஸ்ஸை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கின் முதலாவது சந்தேக நபரான ஜனீசன் போதிதாசன் என்பவர் தொடர்பில் இதுவரை சட்டமா அதிபர் திணைக்கள பரிந்துரைகள் எதுவும் கிடைக்காத காரணத்தால் அவர் எதிர்வரும் 28ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் சார்ள்ஸ் அன்ரனி படையணியின் கப்டன் தர பதவியில் இருந்த சிவஞானம் ஐங்கரன் என்பவருக்கு தஞ்சம் வழங்கிய குற்றச்சாட்டிலேயே அவர்கள் இருவரும் ஓராண்டு காலமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த 2009 ஆம் வருடம் நடைபெற்ற இறுதிக்கட்ட போரின் போது காயமடைந்த நிலையில் விடுதலைப்புலிகளின் சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் இன்னும் சிலருடன் ஐங்கரன் இராணுவத்தினரிடம் சரணடைந்திருந்தார்.

அதன்பின் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த முகாமிலிருந்து கொழும்புக்குத் தப்பி வந்த ஐங்கரன் அங்கு மறைந்து வாழ்ந்து கொண்டு வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டிக் கொண்டிருக்கையில் மீண்டும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் கொழும்பில் மறைந்திருந்த காலத்தில் அதற்கு உடந்தையாக தஞ்சம் வழங்கிய குற்றச்சாட்டின் பேரிலேயே மேற்படி சந்தேக நபர்கள் இருவருக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## 2011.03 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1776 - அமெரிக்கப் புரட்சி: பிரித்தானியப் படைகள் மசாசுசெட்சின் பொஸ்டன் நகரை விட்டு அகன்றனர்.

★ 1805 - நெப்போலியன் தலைவனாக இருந்த இத்தாலியக் குடியரசு, இத்தாலியப் பேரரசு ஆனது. நெப்போலியன் அதன் பேரரசன் ஆனான்.

★ 1845 - இறப்பர் பட்டி (Rubber band) கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1861 - இத்தாலியப் பேரரசு (1861 - 1946) அமைக்கப்பட்டது.

★ 1886 - மிசிசிப்பியில் 20 ஆபிரிக்க அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர்.

★ 1891 - பிரித்தானியாவின் எஸ்எஸ் யூட்டோப்பியா என்ற கப்பல் கிப்ரால்ட்டர் கரையில் மூழ்கியதில் 574 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1919 - றோவ்லட் சட்டத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்வதற்காக மகாத்மா காந்தி சென்னை வந்தார்.

★ 1942 - மேற்கு உக்ரேனிக் லிவிவ் என்ற இடத்தைச் சேர்ந்த யூதர்கள் கிழக்கு போலந்தில் பெல்செக் என்ற இடத்தில் வைத்து நாசி ஜேர்மனியரினால் நச்சு வாயு செலுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1950 - கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கலிபோர்னியம் என்ற 98வது கனிமத்தைக் கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.

★ 1958 - ஐக்கிய அமெரிக்கா வங்கார்ட்-1 செய்மதியை ஏவியது.

★ 1959 - டென்சின் கியாட்சோ, 14ஆவது தலாய் லாமா, திபெத்தில் இருந்து வெளியேறி இந்தியா வந்து சேர்ந்தார்.

★ 1966 - ஆல்வின் என்ற நீர்மூழ்கிக் கப்பல் காணாமல் போன ஐக்கிய அமெரிக்காவின் ஐதரசன் குண்டை மத்திய தரைக் கடல்பகுதியில் ஸ்பெயினுக் கருகில் கண்டுபிடித்தது.

★ 1969 - கோல்டா மெயர் (Golda Meir) இஸ்ரவேலின் முதலாவது பெண் பிரதமரானார்.

★ 1970 - மை லாய் படுகொலைகள் தொடர்பான தகவல்களை வெளியிடாமல் மறைத்த குற்றத்துக்காக அமெரிக்க இராணுவம் 14 இராணுவ அதிகாரிகள் மீது குற்றம் சாட்டியது.

★ 1988 - கொலம்பியாவின் போயிங் விமானம் ஒன்று வெனிசுவேலாவின் எல்லையில் உள்ள மலை ஒன்றில் மோதியதில் 143 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1988 - எரித்திரியாவில் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியினர் (EPLF) எதியோப்பிய இராணுவ நிலைகளை நோக்கி மும்முனைத் தாக்குதலை ஆரம்பித்தனர்.

★ 1992 - ஆர்ஜெண்டீனாவில் இஸ்ரேல் தூதரகத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுவெடிப்பில் 29 பேர் கொல்லப்பட்டு 242 பேர் படுகாயமடைந்தனர்.

★ 1996 - இலங்கை அணி அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்து துடுப்பாட்ட உலகக் கிண்ணத்தை வென்றது.

### பிறப்புகள்

★ 1881 - வால்ட்டர் ஹெஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1973)

★ 1920 - ஷேக் முஜிபுர் ரகுமான், வங்காள தேசத்தின் தந்தை (இ. 1975)

### இறப்புகள்

★ 1937 - ஒஸ்டின் சாம்பர்லேன், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (பி. 1863)

★ 1956 - ஐரீன் ஜோலியோ-கியூரி, வேதியியலுக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1897)

★ 1983 - ஹால்டன் ஹார்ட்லைன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1903)

**2000 - உகாண்டாவில் கடவுளின் பத்துக் கட்டளைகளை மேம்படுத்தும் மத இயக்கம் ஒன்றின் உறுப்பினர்கள் 800 பேர் வரையில் அவ்வியக்கத் தலைவர்களினால் படுகொலை செய்யப்பட்டனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் யார்? நீங்கள் யார்?

நீங்கள் பிறந்த போது, உங்கள் உடலின் அளவு எவ்வளவு இருந்தது? இப்போது எவ்வளவு இருக்கிறது? இடையில் அது வளர்ந்து, விரிவடைய என்ன செய்தீர்கள்? உணவு கொடுத்தீர்கள்!

உங்கள் சாப்பாடு எங்கேயிருந்து கிடைத்தது? இந்த மண்ணிலிருந்து நீங்கள் சாப்பிட்ட ஒவ்வொரு தாவரமும் தானியமும் இந்த மண்ணாலும் நீராலும் தானே தயாராயின?

நீங்கள் அசைவம் என்றால், நீங்கள் சாப்பிட்ட ஆடும் கோழியும் கூட, இந்த மண்ணில் இருந்தவற்றை உண்டுதான் வளர்ந்தன. பின்னர், உங்கள் பசியைத் தீர்த்தன.



ஆக, அடிப்படையில் எப்படியும் இந்த மண்ணில்தான் உங்கள் உடல் உருவாகி இருக்கிறது. உங்கள் உடலில் மண் சேரச்சேர, அதை 'நான்' என்று ஏற்றுக் கொண்டீர்கள்.

ஒரு குவளையில் தண்ணீர் இருக்கிறது. அதுவும் நீங்களும் ஒன்றா? இல்லை என்பீர்கள். அந்தத் தண்ணீரை எடுத்துக் குடித்து விடுங்கள். அது உங்கள் உடலில் கலந்ததும், அதை என்னவென்று சொல்வீர்கள்? நீங்கள் என்றுதானே?

அதாவது, உங்கள் உணர்ச்சி எல்லைக்குள் வருவதைத்தான் நீங்கள் என்று உணர்வீர்கள். வெளியில் இருக்கும் வரை அது வேறு, நீங்கள் வேறு என்று நினைத்தீர்கள்.

வெளியே இருக்கும் தண்ணீரும், மண்ணும், காற்றும், வெப்பமும் கொண்டுதான் நீங்கள் உருவாக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்பதை உணர்கிறீர்களா? அவை உங்களில் ஒரு பகுதியான பின், அவற்றைத் தனித்தனியே வித்தியாசப்படுத்திப் பார்க்க முடியவில்லை. மொத்தமாக 'நான்' என்று அடையாளமிட்டு உணர்கிறீர்கள்.

உங்களுடைய மூதாதையர்கள் எங்கே போனார்கள்? புதைக்கப்பட்டாலும், எரிக்கப்பட்டாலும் இந்த மண்ணுக்குள்தான். அவர்கள் மீதுதான் நீங்கள் தினமும் நடைபோட்டுக் கொண்டு இருக்கிறீர்கள் என்பதை மறக்காதீர்கள். நீங்கள் மட்டும் எங்கே போகப் போகிறீர்கள்? உங்கள் மூலப் பொருளான இதே மண்ணுக்குள்தான்.

கொஞ்சம் மண் உங்கள் வடிவத்தில் மூச்சு விட்டுக் கொண்டு இருக்கிறது. இன்னும் கொஞ்சம் மண், உங்கள் தோட்டத்தில் ஓங்கி வளர்ந்து மரமாகி இருக்கிறது. மேலும் கொஞ்சம் மண், நீங்கள் உட்கார்ந்திருக்கும் நாற்காலியாக இருக்கிறது.

இதே மண்தான் சுழற்சியில் மாமரமாக, வேப்ப மரமாக, புல்லாக, பூவாக, மண்புழுவாக ,மனிதனாக... இப்படிப்பலப் பல வித்தியாசமான அவதாரங்களை எடுத்துக் கொண்டு இருக்கிறது; எடுக்கப் போகிறது.

குடத்தில் பிடித்து வைத்தாலும், சிறு குவளையில் பிடித்து வைத்தாலும், அதைத் தண்ணீர் என்றுதானே அழைப்பீர்கள்? அதே நியாயம் தானே உங்களுக்கும்?

சேகரிக்கப்பட்ட பாத்திரங்கள் வெவ்வேறாயினும், எல்லாவற்றிலும் நிரம்பியிருக்கும் மூலப்பொருள் இதே மண்தானே? இதே தண்ணீர்தானே? இதே காற்றுதானே? இதே வெப்பம் தானே?

எனவே, ஒவ்வொன்றிலும் நீங்கள் இருக்கிறீர்கள், அல்லவா? சுருக்கமாகச் சொன்னால், இந்தப் பிரபஞ்சத்தில் நீங்கள் ஒருபகுதி என்பது போல், இந்தப்பிரபஞ்சமும் உங்களில் ஒரு பகுதி என புரிந்து கொள்ள முடிகிறதா?

இதை மூளையை வைத்துப்புரிந்து கொண்டால் வியக்கலாம். அவ்வளவுதான். மாறாக, உங்கள் உள்ளுணர்வில் இது மலர்ந்துவிட்டால், உங்களுக்குள் பெரும் மாற்றம் வெடிக்கும்.

இதுதான் உண்மையான ஆன்மீகம்!

மற்றையபடி, ஆன்மீகம் என்றால் கோயில்களுக்குச் சென்று தேங்காய் உடைப்பதல்ல. மெழுகுவர்த்தி ஏற்றுவதல்ல. மண்டியிட்டு தொழுவது அல்ல.

இதைப்புரிந்து கொண்டால், கடவுளை எதிர்பார்க்காமல், உங்கள் சொர்க்கத்தை நீங்களே தீர்மானித்துக் கொள்ள முடியும்.

ஒரு யோகி மரணப்படுக்கையில் இருந்தார்.

தன் சீடர்களிடம் தான் சொர்க்கத்துக்குப் போக முடிவுசெய்திருப்பதாகச் சொன்னார்.

"குருவே, உங்களுக்குச் சொர்க்கமா, நரகமா, என்று கடவுளின் மனதில் என்ன இருக்கிறதோ? உங்களுக்கு எப்படி நிச்சயமாகத் தெரியும்?" என்றான் ஒரு சீடன்.

"கடவுளின் மனதில் என்ன இருக்கிறது என்பது எனக்குத் தெரியாதுதான்! ஆனால், என் மனதில் என்ன



ஆன்மீகம் 47

இருக்கிறது என்று அறிவேனே! நரகம் என்று மற்றவர் நினைக்கும் பகுதிக்கு என்னை அனுப்பினாலும், அதையும் சொர்க்கமாகவே கொண்டாட எனக்குத் தெரியும்" என்றார் குரு.

உண்மைதான். உங்கள் உள்ளுணர்வின் அனுபவத்தில் எதையும் சொர்க்கமாக்கலாம் அல்லது நரகமாக்கலாம். அது, வெளிச்சூழ்நிலையின் விளைவு இல்லை.

நீங்களும் அடுத்ததும் ஒன்றேதான் என்பதை உணர்ந்துவிட்டீர்கள் என்றால், அப்புறம் யாரைப்பார்த்துப் பொறாமை கொள்வீர்கள்? யாருடன் சண்டை போடுவீர்கள்? யாருடன் போட்டி போடுவீர்கள்? யாருடன் பகைமை பாராட்டுவீர்கள்? இந்த அனுபவம் வந்தபின் வெளிச் சூழ்நிலைகள் எப்படி அமைந்திருந்தாலும் உள்ளுணர்வில் உங்க ளுக்கு எப்போதுமே சொர்க்கம் தான்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# தமிழ் நாவல்கள் சில நோக்கங்கள்

12



1960-1970 தசாப்தத்தில் எழுதப் பட்ட இன்னொரு நாவல் சி.வி.வேலுப்பிள்ளையின் வீடற்றவன் ஆகும். இது மலையகத் தோட்டத் தொழிலாளரின் கதையாகவும் முதலாவது அரசியல் நாவலாகவும் விளங்குகிறது. மலையகத்தின் மூத்த தலைமுறை எழுத்தாளர் சி. வி. வேலுப்பிள்ளை ஆவார். ஈழத்தின் ஆங்கில எழுத்தாளர்களில் ஒருவர். அவர் எழுதிய 'Born for labour' என்ற ஆங்கில நாவல் இவருக்கு மிகுந்த புகழைத்தேடித் தந்தது. இந்நாவல் மலையக மக்களின் யதார்த்த அவல வாழ்க்கையை சித்திரிக்கின்றது. அவ்வாறான நாவலின் வரிசையில் வீடற்றவன் அமைகின்றது. மலையகத் தொழிலாள மக்களின் அவல வாழ்க்கையை வீடற்றவன் நாவலில் வேலுப்பிள்ளளை நுட்பமாகக் காட்டியுள்ளார். தொழிலாளர்களின் உரிமைகளுக்காகக் குரல்கொடுக்க தொழிற்சங்கத்தை அமைக்கக்கூடாது எனத் தொழிற்சாலைகளின் நெருக்கடிக்ளுக்கிடையே தங்களுக்கென அவர்கள் அமைத்துக் கொள்ள முயலும் சங்கத்தினையும் போராட்டங்களையும் வீடற்றவன் சித்திரிக்கின்றது.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

1935 இல் தொழிற்சங்கச் சட்டம் இலங்கையில் அமுலுக்கு வந்தபோதிலும் தொழிற்சங்கங்களை தோட்டங்களில் அமைப்பதற்கு தோட்ட நிர்வாகம் பலவிதங்களில் முட்டுக்கட்டை இட்டு வந்தது. அத்துடன் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நுழைவதற்கும் தோட்ட நிர்வாகம் அனுமதிக்கவில்லை. பிறந்த நாட்டையும் ஊரையும் விட்டு அந்நிய நாட்டில் குடிபெயர்ந்த மக்களை மீண்டும் திருப்பி அனுப்ப நினைக்கும் ஒப்பந்தத்தால் பாதிப் புற்ற, வீடற்ற, அவல வாழ்க்கையை ஆசிரியர் தன் நாவலில் காட்டுகிறார். 'தொழிற்சங்கத்துக்கு ஆட்சேர்க்க மாட்டேன்' என்ற தொழிலாளி இராமசாமி, பின்னர் அந்த வாக்குறுதியை மீறுகிறான். 'எனக்குப் போக வழிதெரிய வில்லை. எனக்கு ஒரு எடமில்லையே?' எனப் புலம்புகிறான்.

தொழிலாளிலாளர்களைப் பழி வாங்க அதிகாரிகள் போடும் பொய்குற்றச் சாட்டுகள், பெண்களிடம் நடந்து கொள்ளும் முறைதவறிய செய்கைகள்,வறுமைப்பட்ட தொழிலாள மக்களைப் பாதித்தது. அவற்றை வேலுப்பிள்ளை தன் நாவலில் சித்திரிக்கிறார். தொழிலாளர்கள் ஒன்றுபட்டு தம் உரிமைகளுக்காகப் போராட தொழிற்சங்கங்கள் மூலம் போராட வேண்டுமென ஆசிரியர் அவாவுகிறார்.மலைநாட்டின் அக்கால சூழ்நிலை இடமளிக்கவில்லை. ராமலிங்கத்தின் முடிவு துன்பமாக அமைகிறது. நாவலை 'அது புண்பட்ட மனித வர்க்கத்தின் ஊமைக்குரல்' என நிறைவு பெறவைக்கிறார்.

வேலுப்பிள்ளையின் வீடற்றவன் ஆற்றொழுக்காகச் செல்கிறது. மலையக மக்களின் பேச்சுவழக்கு நன்கு பயன்படுத்தப்பட்டிருப்பதால் உரைநடை மிகச் சிறப்பாகவுள்ளது. 1960 களில் மலையகத்தைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல்களில் முதன்மையானது நந்தியின் மலைக்கொழுந்து ஆகும்.இக்கதை தினகரனில் தொடராக வெளிவந்தபோதே பலரின் வாதப்பிரதி வாதங்களுக்கு உட்பட்டது. வாசகர்களுக்கு அதுவரை அதிகம் பரிச்சயமில்லாத களத்தை ஒரு யாழ்ப்பாண எழுத்தாளர் நந்தி யதார்த்தமாகப் படைத்திருந்தார். 1959இல் 'நந்தி குறுக்கு வழி' என்ற சிறுகதையை எழுதினார். அதனைப் பலரும் முழு நாவலாக்கலாமென அபிப்பிராயப்பட்டனர். குறிப்பாக அன்புமணி அந்த அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். அந்த வேண்டுகோளிலுள்ள நியாயத்தைப்புரிந்து கொண்டு நந்தி 1963 களில் அச்சிறுகதையைத் திருத்தங்களோடு 'மலைக்கொழுந்து' நாவலாக்கினார். உரைநடைச் சிறப்புக்காக மூன்று தடவைகள் இந்த நாவலைத் திருத்தி எழுதினார். மலைக்கொழுந்து மெல்லிய காதலுணர்வைச் சித்திரிக்கும் கதை ஆயினும் மலைப் பிரதேசத் தொழிலாளர் அனுபவிக்கும் துயரங்களைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. மலையப்பன் என்ற நிஜ மனிதனூடாக அவனுக்கும் வீராயிக்கும் இடையிலான நேசத்தை விபரிக்கும்போது மலையக மக்களின் இன்னல்களைக் கண்முன் கொண்டு வர முயல்கின்றது. இந்த நாவலின் கதாநாயகனான மலையப்பன் கூறுகின்றான். "இது எனது மலைநாட்டுக் கதை எனது மூதாதையரின் எலும்புரத்திலே வேர் விட்டுச் செழித்து வளர்ந்து செல்வப் பசுங் கொழுந்துகளை தளிர்விடும் தேயிலைச் செடிகள் இதில் பேசுகின்றன. அவற்றை நாம் காதலிக்கின்றோம். எங்கள் அன்னையர் வயிற்றில் நாங்கள் கருவாக வளரும் காலம் வரை நமக்கும் பனி உடை உடுத்திய தேயிலைச் செடிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு" என்றார்.

**கலாநிதி செங்கைஆழியான்**
**க.குணராசா**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்பினால் பரவும் நோய்கள்

வைத்திய கலாநிதி
ந.சிவராஜா

வளர்முக நாடுகளில் ஏற்படுகின்ற நோய்களில் நுளம்புகளால் பரவுகின்ற நோய்கள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. கிட்டத்தட்ட 400 இன நுளம்புகள் உள்ளன. அவற்றில் $^1/_4$ பங்கு மட்டுமே நோய்களைப் பரப்பக்கூடியதாக காணப்படுகின்றது. சாதாரண நுளம்புகளால் பரப்பப்படக்கூடிய நோய்களாவன:

1) மலேரியா (Malaria) அனோபிலிஸ் (Anopheles) எனும் இன நுளம்பாலும்
2) யானைக்கால் நோய் (Filariasis) கியூலெக்ஸ் (Culex)எனும் இன நுளம்பாலும்
3) சிக்குன்குன்யா (chikungunya) மஞ்சள் காச்சல் (Yellow Fever) டெங்கு (Dengue) முதலியன ஈடிஸ் எஜிப்டி (Aedes Aegypti) எனும் இன நுளம்பாலும் பரப்பப்படுகின்றது.

அட்டவணை 1ல் நுளம்புகளின் இனமும் அவை பரப்பும் நோய்களும் பட்டியலிடப்பட்டுள்ளது.

| நுளம்பின் வகைகள் | நோய்கள் |
|---|---|
| அனோபிலிஸ் (Anopheles) | மலேரியா (Malaria) |
| கியூலெக்ஸ் (Culex) | யானைக்கால் நோய் (Filariasis) |
| ஈடிஸ் எஜிப்டி (aeds aegypti) | சிக்குன்குன்யா (Chikungunya), மஞ்சள் காய்ச்சல் (Yellow Fever), டெங்கு காய்ச்சல் (Dengue), இரத்தக்கசிவுடன் கூடிய டெங்கு காய்ச்சல் (Dengue haemorrhagic fever) ஜப்பான் மூளைக்காய்ச்சல் (Japanese encephalitis) |

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இவ்வகை நோய்கள் உலகில் பல்லாயிரக்கணக்கான மக்களின் இறப்பிற்கு காரணமாய் அமைந்துள்ளது. இலங்கையில் அனுராதபுர இராச்சியம், பொலநறுவை இராச்சியம் என்பன மலேரியா நோயின் அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவே நாட்டின் வேறு பகுதிக்கு மாற்றப்பட்டது என்று கூறப்படுகின்றது. விவசாய தேவைக்காக நிர்மாணிக்கப்பட்ட பெரிய குளங்கள் நுளம்பு உருவாகி வளர்வதற்கு காரணமாய் அமைந்தது மட்டுமல்ல அதனால் ஏற்படும் மலேரியா தொற்று நோய் மரணத்திற்கும் இட்டுச்செல்லக் கூடியதாக காணப்படுகின்றது. 1934/35ம் ஆண்டுகளில் மலேரியாவினால் இலங்கையில் 80,000 இறப்புக்கள் ஏற்பட்டன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அந்த ஆண்டுகளில் 6 மாத காலத்தில், இலங்கையின் சனத்தொகையில் $^1/_2$ பங்கினர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



1877ம் ஆண்டில் நுளம்புகள் யானைக்கால் நோய் (Filariasis) எனும் நோயைப் பரப்புகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின் மலேரியா (1898), மஞ்சள் காய்ச்சல் (1990), டெங்கு (1903) ஆகிய நோய்களும் நுளம்புகளாலேயே பரவுகின்றன என கண்டுபிடிக்கப்பட்டது.

நுளம்புகள் ஒட்டுண்ணிகளையும் (மலேரியா, யானைக்கால் நோய்), பக்ரீரியா, வைரஸ் (டெங்கு காய்ச்சல்) நோய்களையும் பரப்புகின்றன.

இவ்வகை நோய்கள் நுளம்புகள் கடிப்பதால் ஒரு மனிதனிடம் இருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவுகின்றது. பெண்நுளம்பு மட்டுமே மனிதனைக் கடிப்பதால் அவை இவ்வகை நோய்களைப் பரப்புகின்றன. ஒரு பெண் நுளம்பு, தனது முட்டையை முதிர்ச்சியடையச் செய்ய மனிதக் குருதி தேவைப்படுகின்றது.

தொற்றுக்குள்ளான ஒரு மனிதனை ஒரு தடவை கடித்தால் அந்த நுளம்பு அதன் வாழ்நாள் வரை தொற்றுள்ளதாக இருக்கும். ஆண் நுளம்பு 2-4 கிழமைகளும் பெண் நுளம்பு 5-7 கிழமைகளும் வாழக் கூடியன. பெண் நுளம்பு தன் வாழ் நாளில் தனது இரையாக குருதியினை 3 அல்லது 4 தடவைகள் எடுக்கும். அதாவது 1வது தடவை இரைக்காக குருதியினை பெறும்போது அந்நுளம்பு தொற்றுக் குள்ளாகிவிட்டால் அது தொடர்ந்து இரைக்காக குருதியினை ஒவ்வொரு முறையும் எடுக்கும்போது தொற்றினைப் பரப்பக்கூடிய தன்மை கொண்டதாக இருக்கும்.

**நுளம்புகளைப் பற்றி...**

நுளம்புகள் ஒருவகைப் பூச்சிகளாகும். அவை மனிதன், விலங்குகள் வாழும் சுற்றுச் சூழலிலேயே வாழுகின்றன. இவை கூடுதலாக வெப்ப வலயப் பிரதேசங்களிலேயே வாழும். சில ஆட்டிக் வட்டத்திற்குள்ளும் காணப்படும். நுளம்புகள் கடல் மட்டத்திலிருந்து 1500 அடி உயரம் வரையும், $28^0C$ முதல் $32^0C$ வெப்பநிலையில் விருத்தியடைந்து பரவலாக வாழக்கூடியன.

முதிர்ச்சியடைந்த பெண் நுளம்புகள் நீருக்கு மேல் முட்டையிடும். எங்கு நீர் காணப்பட்டாலும் அவை அவற்றின் பெருக்கத்திற்கு உதவும். சில நுளம்புகள் (உதாரணமாக மலேரியாவைப் பரப்பும் அனோபிலீஸ் (Anopheles) நுளம்பு) தெளிந்த சூரிய ஒளி படுகின்ற நீரில் வளரும். ஆனால் யானைக்கால் நோயைப் பரப்பக்கூடிய கியூலெக்ஸ் (Culex) வகை நுளம்பு கழிவுநீர்க்குழிகள், மலசலகூடக் குழிகள் போன்ற அழுக்கு நீர்நிலைகளில் வளரும்.

(தொடரும்)

**நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது**

# நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவை நடாத்தும் கலை இலக்கியப் போட்டிகள்

நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவை நடத்தும் கலை இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் வாய்ப்பாட்டு, நடனம், இலக்கியப் போட்டிகள், நடனப்போட்டிகள் என்பன நடைபெறவுள்ளன.

இதில் வாய்ப்பாட்டுப் போட்டி தனிப்பாடல், குழுப்பாடல் என்பன இடம்பெறும். தனிப்பாடல் 3 பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

இதில் கனிஷ்டபிரிவில் 10 - 15 வயது வரையானோர் கீர்த்தனை ஒன்றையும் பாரதி பாடல் ஒன்றையும் 8-10 நிமிடங்களில் பாடவேண்டும்.

சிரேஷ்டபிரிவில் 16 தொடக்கம் 21 வயதுடையோர் கீர்த்தனை இராக ஆலாபனை செய்து கற்பனாஸ்வரம் இரண்டு காலங்களிலும், அத்துடன் பதம் ஒன்றையும் 10 தொடக்கம் 12 நிமிடங்களில் பாடவேண்டும்.

திறந்த பிரிவில், 21 வயதுக்கு மேல் உள்ளவர்கள் பல்லவி ஒன்றையும் தமிழ் பாடல் ஒன்றையும் அத்துடன் இராகம், தானம், நிரவல் கற்பனாஸ்வரம் இருப்பதோடு, 15 தொடக்கம் 20 நிமிடங்கள் வரை பாடவேண்டும்.

குழுப்பாடல் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

இதில் கனிஷ்டபிரிவில் 10 தொடக்கம் 15 வயது வரையானோர் ஆதிதாள வர்ணம் ஒன்றையும் மெல்லிசைப்பாடல் ஒன்றையும் 8 தொடக்கம் 10 நிமிடங்களில் பாடவேண்டும்.

சிரேஷ்ட பிரிவில் 16 தொடக்கம் 21 வயதுடையோர் அடதாளவர்ணம் ஒன்றையும் (சாகித்தியம்), பூர்வாங்கப் பகுதி இரண்டு காலம். உத்தராங்கப் பகுதி - மத்திம காலம் அத்துடன் தில்லானா ஒன்றையும் 10 தொடக்கம் 12 நிமிடங்களில் பாடவேண்டும். பாடுவதற்கு சுருதிப்பெட்டி அல்லது தம்புரா உபயோகிக்கலாம். பக்கவாத்தியங்கள் தவிர்க்கப்படல் வேண்டும்.

நடனம் 3 பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

இதில் தனிநடனம், குழுநடனம், கிராமிய நடனம் ஆகிய பிரிவுகளாக நடைபெறும்.

இதில் தனிநடனம் கனிஷ்ட பிரிவில் 10 தொடக்கம் 15 வயது வரையானோர் பங்கேற்கலாம். கௌத்துவம் அல்லது சப்தம் அடங்கிய நடனமாக 6 தொடக்கம் 8 நிமிடங்களில் அமைதல் வேண்டும்.

சிரேஷ்டபிரிவில் 16 தொடக்கம் 21 வயதுடையோர் கீர்த்தனம் 7 தொடக்கம் 9 நிமிடங்களில் ஆட வேண்டும்.

குழுநடனத்தில் சிரேஷ்ட பிரிவில் 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் தில்லானா அடங்கிய நடனமாக 7 தொடக்கம் 9நிமிடங்களில் ஆட வேண்டும்.

கிராமிய நடனத்திற்கு வயதுக்கட்டுப்பாடு இல்லை. தொழில்சார் நடனமாக (அருவிவெட்டு, குறவன் குறத்தி, மீனவ நடனம்) 7 தொடக்கம் 9 நிமிடங்களில் அமைதல் வேண்டும்.

இதற்கான பக்கவாத்திய செலவுகள் வழங்கப்படமாட்டாது.

இலக்கியப் போட்டியானது பேச்சு, கவிதை ஆகிய இருபிரிவுகளாக நடைபெறவுள்ளது.

இதில் பேச்சுப் போட்டி கீழ்ப்பிரிவில் நான்கு, ஐந்தாம் தரத்திற்கு உட்பட்டவர்கள்; "சுற்றாடலைப் பேணுவோம்", "வாய்மையே வெல்லும்", "நூலகங்கள் எமக்கு வழிகாட்டிகள்", "கட்டாயமாக வேண்டும் கணனி அறிவு" ஆகிய நான்கு தலைப்பில் ஏதாவது ஒன்றைப்பற்றி மூன்று நிமிடங்களில் பேச வேண்டும்.

மத்தியபிரிவில் தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர் சமாதானமாக வாழ்வோம், முதியோரை மதிப்போம், விஞ்ஞானமும் மெய்ஞானமும், பண்புடமை ஆகிய நான்கு தலைப்பில் ஏதாவது ஒன்றைப்பற்றி ஐந்து நிமிடங்களில் பேசவேண்டும்.

மேற்பிரிவில் தரம் 12 தொடக்கம் 13 வரையான மாணவர்கள் திருவுளச்சீட்டின் மூலம் தெரிவு செய்யப்படும் தலைப்பில் 7 நிமிடங்களுக்கு பேசவேண்டும்.

திறந்த போட்டி வயது கட்டுப்பாடின்றி இடம் பெறும். திருவுளச்சீட்டின் மூலம் தெரிவு செய்யப்படும் தலைப்பில் 7 நிமிடங்களுக்கு பேசவேண்டும்.

கவிதைப்போட்டியில் 11 தொடக்கம் 13 வகுப்பு வரையான மாணவர்கள் கொடுக்கப்படும் 4 தலைப்புக்களில் விரும்பிய தொன்றை தேர்ந்தெடுத்து 90 நிமிடங்களில் மரபுக்கவிதையாயின் 8 பாடல்களும் புதுக்கவிதையாயின் 6 வரிகளும் எழுதவேண்டும்.

திறந்த போட்டியில் வயதுக் கட்டுப்பாடில்லை. மரபுக்கவிதையாயின் 8 இற்கு குறையாத பாடல்களும் புதுக்கவிதையாயின் 80 வரிகளும் 90 நிமிடங்களில் எழுதவேண்டும்.

(தொடரும்)

(ஸ்ரீ - 2)

# ஜப்பானிலுள்ள இலங்கையரை அழைத்துவர நடவடிக்கை

ஜப்பானில் பணிபுரிகின்ற இலங்கையரை ஸ்ரீலங்கன் விமானம் மூலமாக பாதுகாப்பாக தாய்நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் ஜப்பானில் வசித்துவருவதாகவும் அவர்களில் சிலர் ஜப்பானிலுள்ள இலங்கை தூதரகத்தைநாடி, தாம் தாய்நாட்டுக்கு திரும்புவதற்கு ஏற்பாடு செய்து தரும்படியும் கோரியிருப்பதாக வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்சித் உயங்கொட தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள சில குடும்பத்தினரும் தங்களுடைய உறவுகள் ஜப்பானில் இயற்கை அனர்த்தத்தில் சிக்கித் தவிப்பதாக முறைப்பாடுகள் செய்திருப்பதாகவும் தெரிவித்த ரஞ்சித் உயங்கொட இதனடிப்படையிலேயே ஜப்பானிலுள்ள இலங்கையரை தாய்நாட்டுக்கு அழைத்துவர துரித நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை பொலிஸாரால் சித்தங்கேணி சந்தியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வீதிச் சோதனை நடவடிக்கையின் போது சாரதி அனுமதிப்பத்திரம் , வாகன அனுமதிப்பத்திரம், வாகன இலக்கத் தகடுகள் இன்றி பயணித்த வாகனங்கள் அடையாளம் காணப்பட்டு தண்டப் பணம் அறவிடப்பட்டது. அத்துடன் பெல், பிறேக், லைற் இன்றி துவிச்சக்கர வண்டிகளில் பயணித்தோர் இடை மறிக்கப்பட்டு அவர்களுடைய துவிச்சக்கர வண்டிகள் இலவசமாக திருத்திக் கொடுக்கப்பட்டது. இந்த நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்.

# சங்காபிஷேகம்

(பொலிகண்டி)

கொற்றாவத்தை அணிஞ்சாம்புலம் முத்துமாரியம்மன் ஆலயத்தில் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு 108 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாவதுடன் சங்காபிஷேகத்தை தொடர்ந்து 12 மணிக்கு மகேஸ்வர பூஜையும் தொடர்ந்து ஒரு மணியளவில் அம்பாள் வீதியுலா நிகழ்வும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-48)

# சகல பாடசாலை வாகனங்களும் இம்மாத இறுதிக்குள் பதிவு

மேல்மாகாண சபையில் சேவையில் ஈடுபடும் சகல பாடசாலை வாகனங்களும் இந்த மாத இறுதிக்குள் பதிவு செய்து கொள்ளப்பட வேண்டுமென தேசிய சிறுவர் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவி அனோமா திசாநாயக்க வலியுறுத்தியுள்ளார். இந்த நாட்களில் வாகனங்களைப் பதிவு செய்யத் தவறுபவர்களிடம் மேலதிகமாக 500 ரூபாய் அறவிடப்படும் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஆராய புதிதாக செயற்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டே இந்த மேலதிக நிதி அறவிடப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மேல்மாகாண சபைக்குள் 7 ஆயிரம் பாடசாலை வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன.

எனினும் கடந்த பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் இதுவரை 3 ஆயிரம் வாகனங்களே பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையின் வான்பரப்பில் கதிரியக்க சோதனைகள்

(கொழும்பு)

ஜப்பானின் புகுசிமா பகுதியில் உள்ள அணு உலைகள் வெடித்ததால் ஏற்பட்டுள்ள கதிரியக்க கசிவுகள் இலங்கையின் வான்பரப்பிலும் காணப்படுகின்றதா என்பது தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜப்பானில் கடந்த வாரம் ஏற்பட்ட பூமி அதிர்வினால் புகுசிமா பகுதியில் பாதிப்படைந்த ஆறு அணு உலைகளில் நான்கு உலைகள் வெடித்துள்ளன. இதனால் ஜப்பானில் 400 மில்லி செவரெற் அளவு கதிரியக்கம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த கதிரியக்க தாக்கங்கள் அண்டைய நாடுகளுக்கும் பரவலாம் என்று எழுந்த அச்சத்தை தொடர்ந்து இலங்கையின் அணு சக்தி அதிகார சபை கதிரியக்க சோதனைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற சோதனைகளில் கதிரியக்கம் காணப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தின் தேவைகள் விரைவில் நிறைவேற்றி தரப்படும்

## சில்வேஸ்திரி அலென்ரின் எம்.பி.தெரிவிப்பு

யாழ். மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலத்தின் தேவைகள் விரைவில் நிறைவேற்றித் தரப்படும் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்துள்ளார். யாழ். மற வன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத் தில் நேற்று முன்தினம் புதிதாக நிர்மாணிக் கப்பட்ட கட்டட திறப்பு விழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பு ரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

கடந்த கால யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட உயிர் இழப்புக்களால் மீளாதுயரு டனும் அனைத்தையும் இழந்து நிர்க்கதிக்குள் ளான சூழ்நிலையில் இவ்வாறான உதவிகள் என் பது மிகவும் பாராட்டப்படவேண்டிய ஒன்று. எனவே, மக்களது எதிர்பார்ப்புக்களுடன் அவர்களது வாழ்வு வளம் பெற எம்மாலான அனைத்து உதவிகளை செய்வோம். இன்று இந்தப் பாடசாலை மட்டுமல்ல இப்பிரதேசத்தில் அமைக் கப்பட்ட வீடுகளும் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலையின் தேவைகள் குறித்து அதிபர் தெரியப்படுத்தியுள்ளார். எனவே, அதனை எதிர்வரும் ஆண்டிற்கான எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து அத்தேவைகளை நிறைவேற்றித் தருவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

சுவிஸ் அரசின் SDC நிறுவனத்தால் இவ் வித்தியாலயம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் சிறப்புரைகளை சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான இணைப்பாளர் தோமஸ் லிற்சாச்சர், அந்த நாட்டின் பிரதி நிதிகள் ஆகியோர் வழங்கினர். (ஸ்ரீ-2-30)

# தேர்தலை நியாயமான முறையில் நடத்த முத்தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியம்

## பொலிஸ் மா அதிபர் கோரிக்கை

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நியாயமான முறையில் நடத்துவதற்கு முத்தரப்பினரதும் ஆதரவு அவசியம் என பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய கோரியுள்ளார்.

பொதுமக்கள், வேட்பாளர்கள் மற்றும் தேர்தல்கள் இடம்பெறும் பிரதேசங்களில் உள்ள அரசியல்வாதிகளினதும் ஒத்துழைப்பு பொலிஸாருக்கு அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவரேனும் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் செயற்படுவார்களாயின் அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் பொது ஆலோசகர்களுக்கு அறிவுறுத்தியுள்ள ... மா அதிபர் தெரிவித்துள்ளார். ...கள் சுதந்திரமானவகையில் வாக்குகளை பயன்படுத்துவதற்கு தேவையான பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் பொலிஸாரின் செயற்பாடுகள் திருப்தி கொள்ளத்தக்கதாக அமையவில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்த கருத்தை முன்வைத்திருந்தார்.

இது தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பொலிஸ் மா அதிபர் கருத்துத் தெரிவிக்கையில், குறித்த குற்றச் சாட்டு ஐக்கிய தேசிய கட்சி பொது செயலாளரின் தனிப்பட்ட கருத்து எனக் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)





'ஆனந்த பவன்' அல்வாயில் வசிக்கும் கோபாலச்சந்திரன் தேவகி தம்பதியரின் செல்வப் புதல்வி சுருதிகா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 17.03.2011 இல் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, தாத்தா, மம்மம்மா, மாமாமார், அத்தைமார், சித்தியப்பா, சித்தியம்மா, சித்தப்பாமார், பெரியசித்தி, அச்சாச்சித்தி, குட்டிச்சித்தி, அத்தான்மார், மச்சாள்மார் ஆலடியான் பாலகணபதி துணைகொண்டு பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

(சி-2709)


# மாங்குளம் மகா வித்தியாலயம் நிர்வாகத்திடம் கையளிப்பு

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மாங்குளம் மகா வித்தியாலயம் நேற்று முன்தினம் இராணுவத்தினரால் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது என மாங்குளம் இராணுவப் பொறுப்பதிகாரி கேணல் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.கடந்த இரண்டு வருடங்களாக மாங்குளம் மகாவித்தியாலயத்தில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் பாடசாலையை விட்டு இராணுவத்தினர் வெளியேறியதுடன் பாட சாலையை நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்தனர்.

பாடசாலையை கையளிக்கும் நிகழ்வில் வவுனியா நகரசபை உபதலைவர் எம்.எம்.ரதன், பாடசாலை அதிபர், துணுக்காய் வலயக் கல்வி அதிகாரிகள் உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர். பாடசாலையின் கற்பித்தல் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் மஹிந்த பால சூரிய தெரிவித்தார்.

பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்களில் விசேட படையினரை கடமையில் ஈடுபடுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இன்று நடைபெறும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 50 ஆயிரம் பொலிஸாரும் 20 ஆயிரம் இராணுவ வீரர்களும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஹ்ரைனில் மக்கள் எழுச்சி!!! அவசரநிலை பிரகடனம்



(மனாமா)

30 ஆண்டு கால சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த எகிப்தின் மக்கள் புரட்சி, அடக்கு முறையில் இருக்கும் மற்ற சில நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அப்படிப்பட்ட தாக்கத்தால் எழுச்சி கண்டுள்ளனர் பஹ்ரைன் மக்கள். அந்நாட்டில் அரசியல் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். ஆனால், அறவழியில் போராட முயன்ற ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். ஆனால், அறவழியில் போராட முயன்ற மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் பலர் பலியாகினர்.

பஹ்ரைனில் கலவரம் கட்டுக்கு அடங்காமல் சென்று கொண்டிருப்பதால் அங்கு 3 மாத காலத்திற்கு அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மன்னர் பிறப்பித்தார்.

மக்கள் நலனுக்காகவும் பாதுகாப்புக்காகவும் அவசர நிலையை பிரகடனப்படுத்துவதாக மன்னர் தெரிவித்தார்.

3 மாதகால அவசர நிலையின் போது பஹ்ரைன் படைகளுக்கு உதவுவதற்காக ஓமன் மற்றும் கட்டார் படைகள் அங்கு விரைந்துள்ளன.

இதற்கிடையில் இராணுவம் குவிக்கப்பட்டிருப்பதையும் பொருட்படுத்தாமல் கலவரத்தில் குதித்த மக்கள் மீது நடத்தப்பட்ட பதற்றமான துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் இறந்தனர். பலர் படுகாயமடைந்தனர். தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவுகிறது. (ஸ்ரீ-2)

## அணு உலை வெடிப்பின் எதிரொலி
# ரஷ்யாவில் கதிர்வீச்சு இராணுவம் உஷார்

(மொஸ்கோ)

ஜப்பானில் அணு உலை வெடித்து கதிர் வீச்சு ஏற்பட்டுள்ளது. காற்றில் பரவிய கதிர் வீச்சு தற்போது ரஷ்யா- ஜப்பான் எல்லையில் இருக்கும் விளாடிவஸ்தக் நகரிலும் பரவியுள்ளது.

இதனையடுத்து ரஷ்ய இராணுவம் உஷார் படுத்தப்பட்டுள்ளது. மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு இராணுவம் வலியுறுத்தி வருகிறது.

(ஸ்ரீ)

# பஹ்ரைன் நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை
## ஈரான் கடும் எதிர்ப்பு

பஹ்ரைன் நாட்டின் மீது முஸ்லிம் நாடுகள் இராணுவ நடவடிக்கை எடுக்க முன்வந்திருப்பது துரதிர்ஷ்டவசமானது என ஈரான் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாடல் ராமின் மெஹ்மன்பரசாத் வளைகுடா நாடுகளின் கூட்டமைப்பின் கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார். பஹ்ரைன் நாட்டு மக்களின் தற்போதைய தீர்வு சட்டப்படி அமைக்கப்படவுள்ள தலைமையை விரும்புகின்றனர். அவர்களின் விருப்பத்திற்கு எதிராக வளைகுடா நாடுகள் இராணுவ நடவடிக்கையில் இறங்கியிருப்பது வேதனையளிக்கிறது. இந்தச் செயலுக்கு பின்புலமாக அமெரிக்கா செயற்பட்டு வருகிறது என்ற சந்தேகம் நிலவுகின்றது. இதன் மூலம் உலகப் போர் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு பஹறைரன் நாட்டின் மீது நடவடிக்கை எடுப்பதை நிறுத்தி அதற்குப் பதிலாக மாற்றுத் தீர்வு மூலம் அந்த நாட்டில் அமைதி ஏற்படுத்த வழிவகை காண வேண்டும் என அவர் கூறினார். (ஸ்ரீ)

# பஹ்ரைன் போராட்டத்தை ஒடுக்க விரைந்தது சவுதி இராணுவம்

(மனாமா)

பஹ்ரைன் அரசுக்கு எதிராக போராடுபவரை ஒடுக்க சவுதி அரேபிய இராணுவம் களத்தில் இறங்கியுள்ளது. மக்கள் மீது வெளிநாட்டு இராணுவத்தை ஏவுவதற்கு ஈரான் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. பஹ்ரைனில் நீண்டகாலமாக பதவியிலிருக்கும் ஆட்சியாளர்களுக்கு எதிராக மற்றொரு பிரிவினர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரு கின்றனர். எகிப்து, லிபியா, துனிசியா ஆகியவற்றில் ஆட்சிக்கு எதிராக நடக்கும் கிளர்ச்சியைத் தொடர்ந்து மனாமாவின் மையப்பகுதியில் அரசின் எதிர்பாளர்கள் குவிந்துள்ளனர். மனாமா நகரின் முக்கிய அரசு கட்டடங்கள் முன் நூற்றுக்கான மக்கள் நேற்று முன்தினம் திடீர் முற்றுகைப் போராட்டம் நடத்தினர். அவர்களைக் கட்டுப்படுத்த இராணுவ வீரர்களை வளைகுடா நாடுகள் கவுன்சில் அனுப்பியுள்ளது. பாதுகாப்பு படையினர் மூலம் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றது.

மனாமாவின் பேர்ல் சதுக்கத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் மறியலில் ஈடுபட்டனர். அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவ வீரர்களை வளைகுடா நாடுகளில் கூட்டமைப்பு மூலம் சவுதி அரேபியா நேற்று முன்தினம் அனுப்பி வைத்தது. இந்த அமைப்பின் பஹ்ரைன், சவுதி அரேபியா, குவைத், கட்டார், ஐக்கிய அரபு, எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன. பஹ்ரனில் உள்ள எண்ணெய் நிறுவனங்கள், மின் நிலையங்கள், வங்கிகள், தொழிற்சாலைகளை பாதுகாக்கும் பணியில் இந்த வீரர்கள் ஈடுபடுத்தப்படுவர் என வளைகுடா நாடுகளின் கூட்டமைப்பு தெரிவித்தது.

இந்த நிலையில் போராட்டம் நடத்தும் மக்களை ஒடுக்காமல், அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தும்படி பஹ்ரைனுக்கு அமெரிக்கா அறிவுரை வழங்கியுள்ளது. பஹ்ரைனில் எதிர்பாளர்களை கட்டுப்படுத்த வெளி நாட்டு இராணுவத்தை அழைத்திருப்பதற்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ)



ஜப்பானில் ஏற்பட்ட சுனாமி தாக்கத்தைத் தொடர்ந்து மியாகி மாகாணத்தில் உள்ள மினாமிசன்ரிக்கு என்ற ஊரில்தான் 10 ஆயிரம் பேர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டது. அந்நகரைச் சேர்ந்த சிலர் யாராவது உயிருடன் இருக்கிறார்களா என்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

# கதிர்வீச்சு அபாயம் குறித்த தகவலை மறைக்கிறது ஜப்பான் அரசு
## ஜப்பானியர்கள் அச்சம்!

(டோக்கியோ)

அணு உலைகள் வெடித்து கதிர்வீச்சு வெளியேறுவது குறித்த உண்மையான தகவலை ஜப்பான் அரசு மறைப்பதாக மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

ஜப்பானில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தால் வடகிழக்கு, நகரங்களை சுனாமிப் பேரலைகள் கடுமையாகத் தாக்கியது. அதில் ஏற்பட்ட மின் துண்டிப்பால் பிகுஷிமா டைச்சி அணு மின் நிலைய அணு உலை பாதுகாப்பு கொங்கிரீட் சுவர் வெடித்து மேலும் மூன்று அணு உலைகள் வெடிக்க வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்பட்டது. இதையடுத்து 30 கிலோமீற்றர் சுற்றளவில் வசித்த 1.4 இலட்சம் மக்கள் பாதுகாப்புக் கருதி வெளியேறினர்.

பூகம்பம் மற்றும் சுனாமியால் ஆயிரக்கணக்கானோர் பலியான நிலையில் அடுத்தடுத்து அணு உலைகளை வெடித்து கதிர் வீச்சு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் மக்கள் பெரும் துன்பத்தில் ஆழ்ந்துள்ளனர். இந்நிலையில் அணு உலைகளில் தீ பற்றியுள்ளதால் சக்திவாய்ந்த கதிர்வீச்சு வெளியாகும் என கூறப்படுகிறது. ஆனால், கதிர்வீச்சு அபாயம் குறித்து உண்மையான தகவலை அரசு மறைப்பதாக மக்கள் அச்சம் அடைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

அணு மின் நிலையத்தில் நேற்று காலையில் மீண்டும் லேசான தீ விபத்து ஏற்பட்டுள்ளது. மொத்தம் உள்ள 3 அணு உலையில் 3 வெடித்து சிதறியது. இதனையடுத்து நேற்று காலையில் ஒரு அணு உலையில் தீ விபத்து ஏற்பட்டிருப்பதால் அங்கிருக்கும் ஊழியர்கள் அனைவரையும் வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மக்களின் ஆதரவை இழந்து விட்டதால் முவம்மர் கடாபி பதவி விலக வேண்டும்
## ஒபாமா வலியுறுத்தல்

லிபிய நாட்டின் ஜனாதிபதி கடாபி மக்கள் ஆதரவை இழந்து விட்டதால் அவர் பதவியை துறந்துவிட்டு நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வலியுறுத்தியுள்ளார்.

கடாபிக்கு எதிராகவும், அவர் பதவி விலகக் கோரியும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இவ்வாறு தனக்கு எதிராக போராடி வரும் மக்கள் மீது இராணுவத்தை கொண்டு தாக்குதல் நடத்தி வருகிறார். இந்த நிலையில் அவர் பதவி விலகி விட்டு நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்று ஒபாமா வலியுறுத்தியுள்ளார்.

டென்மார்க் நாட்டு பிரதமர் லார்ஸ் லோக்கே ராஸ்முசின் அமெரிக்கா சென்று ஒபாமாவை சந்தித்துப் பேசினார். அதன்பின் இரு தலைவர்களும் கூட்டாக நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது ஒபாமா கூறியதாவது, லிபிய ஜனாதிபதி முவம்மர் கடாபி மக்கள் ஆதரவை இழந்து விட்டார். இதனால் அவர் பதவியில் நீடிப்பதற்கு சட்ட அங்கீகாரம் கிடையாது. எனவே, அவர் பதவியில் இருந்து விலக வேண்டும். நாட்டை விட்டு வெளியேற வேண்டும்.

மக்களுக்கு எதிராக நடத்தப்படும் வன்முறையை சர்வதேச சமுதாயம் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். இதை டென்மார்க் பிரதமரும் ஏற்றுக்கொள்கிறார்.

லிபியாவில் மக்களுக்கு மனிதாபிமான உதவி வழங்கப்படும். லிபியாவின் எல்லை பகுதியில் உள்ள மக்களுக்கும் இந்த உதவி கிடைக்கச் செய்வோம். கடாபிக்கு நிர்ப்பந்தம் கொடுத்து அவரை பதவியில் இருந்து அகற்றுவோம் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)



ஜப்பானில் ஏற்பட்ட சுனாமி தாக்குதலைத் தொடர்ந்து பகூஷியா மாகாணத்தில் அணு உலைகள் வெடித்துச் சிதற தொடங்கியுள்ளன. இது தொடர்பாக எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து டோக்கியோவில் அந்நாட்டு பிரதமர் நெட்டோகான் உயரதிகாரிகளுடன் [illegible]தை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டில் படிக்க நினைக்கும் மாணவர்களுக்கு



இலங்கை கல்வி முறைக்கும், வெளிநாட்டு கல்வி முறைக்கும் அதிகபட்ச வித்தியாசங்கள் உள்ளன. நீங்கள் வெளிநாடு சென்று படிக்க விரும்பினால் முதலில் அந்த நாட்டின் கல்வி முறையைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

அயல்நாட்டு கல்வி நிலையங்களில் வெறும் பாடங்கள் மட்டுமே கல்வி அல்ல.

குழு கலந்துரையாடல், செய்முறை, கட்டுரைகள் எழுதுதல், ஒப்படைகள் தயாரித்தல் என தொடர்ந்து மாணவர்களின் அறிவுத் திறனை வளர்க்கும் முறைகளைக் கொண்டதாக அமைகிறது.

இலங்கை மாணவர்கள் பெரும்பாலும் இந்த முறைகளை எளிதில் பழக்கிக் கொள்கிறார்கள் என்பது பொதுவான கருத்தாகும். வெறும் படிப்பு மட்டுமல்லாமல், இதர நடவடிக்கைகளுக்கும் இங்கு மதிப்பளிக்கப்படு கிறது. வெறும் பாடப்புத்த கத்தை வைத்துக் கொண்டு இல்லாமல், ஒரு சகலதுறை மாணவர்களை உருவாக்க வேண்டும் என்பதே இங்குள்ள பல்கலைக்கழகங்க ளின் இலட்சியமாகும்.

நீங்கள் செல்ல விரும்பும் நாட்டின் கல்வி முறை, மொழி, உணவுப் பழக்கவழக்கம், வாழ்க்கை முறை போன்றவை நாளடைவில் உங்களால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும்.

வெளிநாடு சென்று பயிலும்போது சில பிரச்சினைகளும், பல நல்ல விடயங்களும் நடக்கும். எதுவாக இருந்தாலும் எதையும் எதிர்கொள்ளும் மனத்துணிவை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

வெளிநாடு செல்லும் மாணவர்களை புதிய கலாசாரம், பெற்றவர்களைப் பிரிந்த சோகம், புதிய கல்வி முறை, புரியாத மொழி போன்ற பிரச்சினைகள் ஒரே சமயத்தில் தொற்றிக் கொள்ளும். ஆனால் இவை அனைத்துமே நாளடைவில் உங்களுக்கு பழகிவிடும் என்ற நம்பிக்கை வேண்டும்.

செலவுகளை திட்டமிடல், குழுவாக தங்குதல், அந்நாட்டு மொழியை கற்றுக் கொள்ளுதல், உங்களது வேலைகளை நீங்களே செய்து கொள்வது போன்றவை உங்கள் புதிய வாழ்க்கையை எளிதாக்கும்.

இலங்கை மாணவர்கள் சுறுசுறுப்பு, கடின உழைப்பு, ஆர்வம், பிற மொழிகளை எளிதாக பேசுதல், மற்றவர்களுடன் பழகுதல் போன்றவற்றிலும் முதன்மையானவர்களாக உள்ளதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டிற்கு சென்று படிக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால் உடனடியாக அதற்கான வேலைகளில் இறங்குங்கள். ஏனெனில் இந்த கனவு நனவாக சில காலம் பிடிக்கும். உங்கள் பண வசதி, படிக்க விரும்பும் நாடு, பல்கலைக்கழகம், பாடப்பிரிவு அனைத்தும் பற்றி தெளிவான முடிவினை எடுப்பதும் நல்லது. முக்கியமாக இவை அனைத்திற்கும் உங்கள் கல்வித் தகுதிதான் அடிப்படையாக இருக்கும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

# வெற்றியாளரா... தோல்வியாளரா... யார் நீங்கள்?

வாழ்க்கையில் வெற்றி பெறுவது நம் ஒவ்வொருவரின் மனதில் எழும் எண்ணங்களை பொறுத்தது. அனைவருமே வெற்றியாளராக வர வேண்டும் என்றுதான் விரும்புவார்கள். ஆனாலும் ஒரு சிலர் மட்டுமே வெற்றியாளராக முடிசூட்டுகின்றனர்.

இதற்கு தோல்வியாளர்களிடமிருந்து, வெற்றியாளர்கள் சில விடயங்களில் தனித்து நிற்பதால் தான் வெற்றியாளர்களாக உருவாகின்றனர்.

♦ தோல்வியடைபவர்கள் ஒரு விடயத்தை செய்ய வேண்டும் என நினைப்பார்கள். ஆனால் செய்ய மாட்டார்கள் அல்லது எதை செய்யக்கூடாது என நினைக்கிறார்களோ அதனைச் செய்வார்கள். வெற்றியாளர்கள் எதைச் செய்ய நினைக்கிறார்களோ அதனைச் செய்து முடிப்பார்கள். அதேபோல செய்ய வேண்டாம் என முடிவெடுத்தால் கண்டிப்பாக அதை செய்யமாட்டார்கள்.

♦ தோல்வியாளர்கள் ஒவ்வொரு வாய்ப்பிலும் பிரச்சினையை பார்ப்பார்கள். ஆனால் வெற்றியாளர்கள் ஒவ்வொரு பிரச்சினைகளையே வாய்ப்பாக பார்ப்பார்கள்.

♦ தோல்வியாளர்கள் மனதில் தோன்றுவதை செய்வர். ஆனால் வெற்றியாளர்கள் நன்கு திட்டமிட்டு செயலாற்றுவர்.

♦ தோல்வியாளர்கள் அடுத்தவர்கள் வழிமுறைகளை நிராகரிப்பார்கள். ஏனெனில் ஏற்றுக்கொண்டால் அவர்களை விட நாம் தாழ்ந்தவராகி விடுவோம் என்று எண்ணுவார்கள்.

ஆனால் வெற்றியாளர்கள் அடுத்தவர் களின் வழிமுறைகளை ஏற்றுக் கொள்வார்கள். ஏனெனில் அதிலிருந்து அவர்கள் புதிதாக கற்றுக் கொள்ள தயாராக இருப்பார்கள்.






♦ தோல்வியாளர்கள் முதல் தோல்வியிலேயே அம்முயற்சியிலிருந்து வெளிவந்து விடுவார்கள். ஆனால் வெற்றியாளர்கள் ஒவ்வொரு தோல்வியையும் வெற்றிக்கான படிக்கட்டுக்களாக மாற்றுவார்கள்.

♦ தோல்வியாளர்களிடம் விடா முயற்சி இருப்பதில்லை. வெற்றியாளர்கள் தங்களது கனவு நனவாகும் வரை முயற்சி செய்வார்கள்.

♦ தோல்வியாளர்கள் வெற்றியாளர்களை பார்த்து பொறாமைப்படுவார்கள். ஆனால் வெற்றியாளர்கள், வெற்றி பெற்ற ஒவ்வொருவரையும் பாராட்டுவார்கள்.

♦ தோல்வியாளர்கள் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிப்பர். வெற்றியாளர்கள் வேலையையும், ஓய்வையும் சரிசமமாக எடுத்துக்கொள்வார்கள்.

♦ தோல்வியாளர்கள் கனவு காண்பர். ஆனால் அதனை செய்ய மாட்டார்கள். வெற்றியாளர்கள் தங்களது கனவு நிறைவேற என்னவெல்லாம் தேவையோ அதனை செய்து முடிப்பதிலேயே எப்போதும் குறியாக இருப்பர்.

♦ தோல்வியாளர்கள் அடுத்த அடிக்கு நகரமாட்டார்கள். ஏனெனில் அடுத்தது என்னாகுமோ என்ற பயம் அவர்களை சூழ்ந்திருக்கும். வெற்றியாளர்கள் தங்களது எதிர்மறை எண்ணங்களை தவிர்த்து விட்டு அடுத்த கட்டத்துக்கு செல்வதையே சிந்தித்து கொண்டிருப்பார்கள்.

♦ தோல்வியாளர்கள் ஒரு விடயத்தை முடியாது என்பார்கள். ஆனால் வெற்றியாளர்கள் சாத்தியத்திற்கு முடிவே இல்லை என்பார்கள்.

♦ தோல்வியாளர்கள் வாழ்க்கையில் தங்களை சுற்றி எவ்வித எதிர்ப்போ, துன்பமோ இருக்கக் கூடாது என நினைப்பார்கள். ஆனால் வெற்றியாளர்கள் தங்களது எண்ணம் நிறைவேறுவதற்கு என்னவெல்லாம் தடையாக இருக்கிறதோ அதனை முறியடித்து முன்னேறுவதையே விரும்புவர்.

என்ன நீங்கள் வெற்றியாளரா இல்லை தோல்வியாளரா என்பதை தெரிந்து கொண்டீர்களா... வெற்றியாளர்களா இருப்பின் உங்களது செயலை தொடர்ந்து சிறப்பாக செய்யுங்கள். இல்லையென்றால் வெற்றியாளர்களாக மாறுவதற்கு முயற்சியுங்கள்.

# வானியல் படிப்பு

*வானியல் துறை படிப்புகள் அதிசயம், ஆச்சரியம் மிக்கவை. இதில் நாளுக்கு நாள் புதுப்புது விடயங்கள் கண்டுபிடிக்கப்படுவதால் ஆர்வத்துடன் இந்த துறை படிப்புகளை பயில முடியும். இது பழமையான அறிவியல். இந்த துறை படிப்புகளில் கோள்கள், அதில் உள்ள பொருட்கள், செயற்பாடுகள், தோற்றங்கள் ஆகியவை கற்றுத்தரப்படுகிறது.*

*இந்த துறை பணிகள் ஆராய்ச்சியை மையமாக கொண்டதால் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு உணர்வு தேவை. எல்லாவற்றுக்கும் மேலாக தனிப்பட்ட ஆர்வம், முயற்சி இருந்தால் வானியலில் முத்திரை பதிக்கலாம். பத்தாம் வகுப்பு, உயர்தரம் முடித்தவுடன், வானியல்துறையில் ஆர்வமிருப்பவர்கள் இளநிலை வானியல் படிப்புகளை தேர்ந்தெடுத்து படிக்கலாம். இந்த துறையில் டிப்ளோமா, சான்றிதழ் படிப்புகள், இளநிலை, முதுநிலை, பி.எச்.டி., படிப்புகள் ஆகியவை உள்ளன. பொதுவாக இலங்கையில் உள்ள முக்கிய பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் வானியல் படிப்புகள் கற்றுத்தரப்படுகின்றன.*

*வானியல் துறையில் இலங்கை, வெளிநாடுகளில் ஏராளமான பணி வாய்ப்புகள் உள்ளன. ஆரம்ப நிலையில் ரூபாய் 30 ஆயிரம் முதல் சம்பளம் வழங்கப்படுகிறது. பின்னர் திறமை, அனுபவத்துக்கு ஏற்ப சம்பளம் பல மடங்கு உயரும். விண்வெளியில் இயற்கையின் தன்மையை ஆராய்வதால் ஆர்வத்துடன் இத்துறையில் பணியாற்றலாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சிந்தனையை மறைக்க வேண்டாம். நேர்மையான முறையில் வெளிப்படையாகப் பேசுங்கள். –ஹோமர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பேச்சுவார்த்தையின் நாடி ஓட்டம் யாதோ?

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை மூன்றாவது தடவையாக நாளை 18–ம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தை எனக் கூறப்பட்டாலும் அது விடயத்தில் அரச தரப்பு விசுவாசமாக செயற்படுகின்றதா என்ற சந்தேகம் நூறு வீதம் இருக்கவே செய்கின்றது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோது இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பதில் அரசுக்கு உடன்பாடு இல்லை என விடுதலைப்புலிகளும் மாறாக விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் விசுவாசமாகக் கலந்து கொள்ளவில்லை என அரசும் மாறி மாறி குற்றஞ்சாட்டியிருந்தன.

ஆனால் தற்போது அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விசுவாசத்துடன் கலந்து கொள்ளவில்லை என அரசு உட்பட எவரும் கூறமுடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வுத் திட்டத்தை அடைய வேண்டும் என்ற கட்டாயம் உண்டு.

எனவே பேச்சுவார்த்தையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நூறு வீத விசுவாசத்துடன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்கிறது.

அதேநேரம் அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில், அக்கறை கொண்டுள்ளதா என்பதை நோக்கும் போது அவ்வாறான அறிகுறிகள் எதுவும் தென்படுவதாக தெரியவில் லை.

ஆக ;இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது என்கின்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை ;நெருக்கடியைத் தவிர்த்துக் கொள்வது அரசின் நோக்கம் என்ற பரவலான கருத்து இருக்கவே செய்கிற து.

இவற்றின் மத்தியில் பேச்சுவார்த்தை நடைபெறப்போகின்றது.பேச்சுவார்த்தையில் இலங்கை அரசு விசுவாசமாகச் செயற்படுகின்றதா அல்லது காலங்கடத்தி சாதகமான சூழமைவுக்காக பேச்சுவார்த்தையை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றதா என்பதை பேச்சுக்களில் கலந்து கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளே தீர்மானிக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கம், சிந்தனை அரசிடம் அறவேயில்லை என்பதை உணரமுடியுமாயின் பேச்சுவார்தையில் இருந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு விலகிக் கொள்வது புத்திசாலித்தனமாகும்.

இதைவிடுத்து பேச்சுவார்த்தை என காலங்கடத்துவது தமிழ் இனத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

பேச்சுவார்த்தையை நீடித்து செல்வதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் தேர்தல்களில் வெற்றிபெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற குறுகிய சிந்தனைக்கு எந்த வகையிலும் இடந்தருதல் கூடாது.அது தமிழ் இனத்திற்குசெய்யும்மிகப்பெரும்கொடுமையாகும்.

# சட்டவிரோதமான முறையில் கடன் வழங்கிய இலங்கையர் கைது

லண்டனில் சட்டவிரோதமான முறையில் கடன் வழங்கும் தொழில் செய்து வந்த இலங்கையர் ஒருவர் அதன் மூலம் சுமார் 5இலட்சம் பவுணிலும் கூடுதலான பணம் திரட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் ஈஸ்ட்ஹாம் பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதான க.நடராஜா என்பவரே இந்த சட்டவிரோத கடன் வழங்கல் தொழிலில் ஈடுபட்டவரென குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

அவர் தங்க நகைகளைப் பொறுப்பாக பெற்றுக் கொண்டே கடன்களை வழங்கினாரென நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.இவருக்கு உதவியாக வே.ஜெகந்திரபோஸ் என்பவரும் செயற்பட்டுள்ளார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நடராஜாவிடம் கடன் வாங்கிய ஜனக மோகன் என்பவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சட்டவிரோதக் கடன் குழுவும் பொலிஸாரும் நடராஜாவின் வீட்டை சோதனையிட்டபோது ஏராளமான தங்க நகைகளும் சட்டவிரோத கடன்கள் பற்றிய விபரங்களும் கைப்பற்றப்பட்டன.

சட்டவிரோதமாக கடன் வழங்கியமை, குற்றவழியில் பணம் சேர்த்தமையென இரண்டு குற்றச்சாட்டுகள் நடராஜா மீது சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2-9)

# சன் சீ கப்பலில் பயணித்த அகதி தொடர்ந்தும் தடுப்புக்காவலில்

விடுதலைப் புலி அமைப்பினருக்குரிய கழுத்தணியொன்றை அணிந்திருந்தார் என்பதால் விடுதலைப் புலிகளுடன் இயங்கியிருக்கலாமென்ற சந்தேகத்தின் பேரில் கனேடிய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண் குறைந்த பட்சமாக இன்னும் ஒரு மாதகாலம் தடுத்து வைக்கப்படுவாரென கனேடிய குடிவரவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கனடா எல்லை சேவைகள் முகவரமைப்பு விசாரணைகளை மேற்கொள்வதால் இவரை தடுப்புக்காவலில் வைக்க வேண்டுமென அகதிகள் சபை கூறியுள்ளது.


கடந்த ஒகஸ்ட் மாதம் சன் சீ கப்பலில் கனடா வந்து சேர்ந்த 492 இலங்கை தமிழ் அகதிகளுடன் இந்தப் பெண்ணும் தனது பிள்ளைகளுடன் வந்தார். இப்போதும் தடுத்து வைத்திருக்கப்படும் ஒரேயொரு தாயாக இவர் உள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. (ஸ்ரீ-2)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## சகோதர அன்போடு எல்லா மனிதரையும் அணைத்துப் போகவேண்டும் (மத் 7:7–12)

மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்ய எவ்வளவுதான் முயன்றாலும் அதில் முழுமையாக வெற்றிபெறுவதில்லை. மனித வாழ்வின் நிறைவு அந்த வாழ்வையும் தாண்டிச் செல்கின்றது. அந்த நிறைவை நமக்குக் கடவுள் ஒருவரே கொடையாக வழங்க முடியும். அதே நேரத்தில் அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்ய நாம் கடவுளின் உதவியை நாட வேண்டும். அப்போது கடவுள் நமக்கு உதவுவார் என்றும் இயேசு கற்பிக்கிறார்.

"கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்" என்னும் இயேசுவின் அழைப்பில், தேடுங்கள் என்னும் சொல்லை மட்டும் இன்றைய சிந்தனைக்காக எடுத்துக் கொள்வோம். "தேடுங்கள், கண்டடைவீர்கள்" என்கிறார் ஆண்டவர். தமது ஆட்டைத் தொலைத்த ஆயன், பிற ஆடுகளை விட்டுவிட்டு, தொலைந்துபோன ஒரே ஒரு ஆட்டைத் தேடி அலைந்தார். கண்டுபிடித்தார். தனது ஒரு நாணயத்தைத் தொலைத்த பெண் மற்ற வேலைகள் அனைத்தையும் விட்டுவிட்டு, தொலைந்த நாணயத்தைத் தேடிக் கண்டுபிடித்தார். விடா முயற்சியோடு தேடுபவர்கள் தாங்கள் தேடுவதை நிச்சயம் கண்டடைவார்கள் என்பது இயேசுவின் அமுத மொழி. கடவுளின் பிள்ளைகளாகிய நாம் உரிமையோடு கடவுளை நம் தந்தை என அழைக்கமுடியும். அப்போது தந்தைக்குரிய பாசத்தோடு கடவுள் நம் தேவைகளை நிறைவுசெய்வார். அவர் நம்மிடம் எதிர்பார்ப்பது நாம் அவருடைய அன்புப் பிள்ளைகளாக வாழ வேண்டும். விருப்பத்திற்கு ஏற்ப நம் வாழ்வை அமைத்திட வேண்டும். சகோதர அன்போடு எல்லா மனிதரையும் அணைத்துப் போகவேண்டும். நாம் எதைத் தேடுகிறோம்? எப்படித் தேடுகிறோம்? பொன்னை, பொருளை, இவ்வுலக இன்பங்களைத் தேடாமல், இறையாட்சியை, இறையாட்சியின் இலக்குகளான நீதி, அன்பு, சமத்துவத்தைத் தேடுகிறோமா? நிலைவாழ்வின் ஊற்றான இறைவனைத் தேடுகிறோமா? இத்தவக்காலத்தில் இறைவனைத் தேட முன்வருவோம். இரண்டாவதாக, தேடுவோர் அனைத்தையும் விட்டுவிட்டு தேடுவதில் மட்டுமே கவனம் கொள்ளவேண்டும் [illegible] வே. இத்தவக்



காலத்தில் தொலைக்காட்சி, உலக இன்பங்கள் இவற்றில் அதிக நாட்டம் கொள்ளாமல், உலக இன்பங்களைத் தேடாமல், இறைவனை தேட வேண்டும். அனைத்தையும் விட்டுவிட்டு, முழு முனைப்போடு இறைவனை மட்டுமே தேடி அவருக்குரியவற்றில் மட்டுமே கவனம் கொண்டால், நம் தேடுதல் வெற்றியில் முடியும்.

# கருணை என்னும் காற்றில் பக்தி எனும் படகின் பாயை விரிப்போம்

மனிதனின் சகல செயற்பாடுகளும் இறைவனைச் சார்ந்தவை என்று எளிதில் கூறி பாவகாரியங்களை செய்வதற்கு துணை தேடுபவர்கள் இன்று அதிகம் எனலாம். நன்மை, தீமை இரண்டையும் தருபவர். இறைவனே என்று பழியை இறைவன் பெயரில் போட்டுவிட முடியாது. துன்பம் வரும் போது கலங்கும் நமது உள்ளம் நன்மை பயக்கும் போது அது நமது திறமை என்றும் தீமை விளையுங்கால் இறைவன் எம்மை சோதிக்கின்றான் என்றும் இறைவனை கடிந்து கொள்கின்றோம். அப்படி எண்ணுவதே இந்தப் பெரிய தெய்வநிந்தை. உலக இன்பங்களுக்காக நாமே தீமையை படைத்துக் கொள்கிறோம். அனைத்தையும் இறைவனே செய்கிறான் என சொல்லிக் கொண்டே தெரிந்தும் தவறுகளை செய்கின்றோம். ஒருவன் தன்னைத்தானே வஞ்சித்துக்கொள்வதன் பிறப்பிடம் இதுவே.

நாம் ஒரு நற்செயலை பிறருக்கு செய்தால் அதனால் ஒரு வகை உள்ளக் கிளர்ச்சி ஏற்படுவதை நாம் உணருகின்றோம். எனவே அந்த நன்மையை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இது மனித இயல்பு. ஆனால் ஒருவர் குற்றச்செயல் [illegible]க்கொண்டு தீமைக்குரிய குற்றத்தை இறைவன் மீது போடுவது எவ்வளவு தவறு. எனவே, நன்மை எல்லாவற்றிற்கும் இறைவனே காரணம் என்றும் தீமைகளுக்கு நாமே பொறுப்பு என்றும் கருதினால் இறைவன் மீது பக்தியும் மரியாதையும் ஏற்பட்டு அவனருள் கிட்டும்.

புனிதமாக வாழ்வதற்கு தீர்மானித்துக்கொள். இவ்வுடல் எவ்விதமாயினும் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றப் பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வுடலானது பிறருக்கு நன்மை செய்வதற்காகவே படைக்கப்பட்டது அன்றி தீமை செய்யவல்ல. கைக்குட்டை போல நாமும் எமக்காக இல்லாமல் பிறருக்காக சேவை செய்யவே பிறந்துள்ளோம்.

நம்பிக்கை அற்றவன் கடவுளைக் கண்ணால் கண்டால் கூட நம்பமாட்டான். கிருஷ்ணபரமாத்மாவின் விஷ்வரூபத்தை துரியோதனனும் கண்டான். அருச்சுனனும் கண்டான். துரியோதனன் இது மாய வித்தை என்றான்.அருச்சுனன் இவர் கடவுள் என்றான். இதேபோன்று தான் நமக்கு முன்னால் பரந்த தெய்வம் பகவான் பாபா. நடமாடும் போது கூட நம்பிக்கை அற்றவர்களாக இருந்தோம். இவ்வுலகத்தில் பகவான் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் பேரொளிச் சுடராக விளங்குகின்றார்.



இறைவனின் கருணையாகிய காற்று எப்போதும் வீசிக் கொண்டே இருக்கிறது.நீ செய்ய வேண்டியதெல்லாம் உன்படகின் பாயை விரிக்க வேண்டியதுதான் என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னது போல பகவானை நோக்கி சென்று கொண்டிரு. எந்நேரமும் அவரையே ஆதாரமாகக் கொண்டிரு. உங்கள் வாழ்வு முழு வதையும் பகவானே நடத்தி வைப்பார். எந்தத் திருப்பாத தாமரைகள் ஞானிகளாக தேடப்படும் நாதாந்த வடிவாக இருக்கிறதோ, எத்திருப்பாதங்கள் பக்தர்களால் தேடப்படும் நிலைக்களமாக இருக்கிறதோ அந்தத் தாமரைப் பாதங்களை விட வேறு எவரி டமும் நாம் சரண்புக முடியும்.

ஜெய் சாய்ராம் யாதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆவது

# இந்துக்களின் கிரிக்கெட் சமர் நாளை கோலாகல ஆரம்பம்

இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான இரண்டு நாள் இன்னிங்ஸ் கிரிக்கெட் போட்டி நாளை யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

நான்காவது வருடமாக நடைபெறும் இப்போட்டி 2008 ஆம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இந்த வருடம் பயிற்றுவிப்பாளர் கோகுலனின் வழிநடத்தலின் கீழ் களமிறங்குகின்றது. கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 2011 ஆம் ஆண்டு அகில இலங்கை பாடசாலைகளின் பிரிவு 3 இற்கான சுற்றில் அரையிறுதி வரையும் முன்னேறியுள்ளது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி இறுதிப் போட்டிக்கு முன்னேறும் பட்சத்தில் பிரிவு 2 அணிகளுக்குள் நுழையும் வாய்ப்பும் கிடைக்கும்.

அவ் அணியின் துடுப்பாட்ட வரிசை மிகவும் பலம் வாய்ந்தது. ஆரம்பத்திலிருந்து இறுதி வரை போராடக் கூடிய துடுப்பாட்ட வீரர்களைக் கொண்டு களமிறங்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியில் பலர் சகல துறை வீரர்களாக உள்ளமை பலம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி, இம்முறை உமாவின் இளமைத் துடிப்புள்ள பயிற்றுவிப்பில் களமிறங்குகின்றது. யாழ். இந்துக்கல்லூரி அணி இவ்வாண்டு நடைபெற்ற போட்டிகளில் பல வெற்றிகளைக் குவித்துள்ளது.

இவ் அணியின் துடுப்பாட்ட வரிசைக்கு ஏற்றாற்போல பந்துவீச்சும் பலமாக உள்ளது.

2010 ஆம் அண்டிலே கொக்குவில் இந்துக்கல்லூரி தனது 100 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருப்பதுடன் யாழ் இந்துக்கல்லூரியின் கொழும்புப் பழைய மாணவர் சங்கம் தனது 100 ஆவது ஆண்டில் தடம் பதித்துள்ள இத்தருணத்தில் இரு கல்லூரிகளையும் பொறுத்தவரையில் வரலாற்றுச் சுவடுகளில் எழுதப்பட வேண்டிய ஆண்டாகும்.

எனவே இந்த 2011 ஆம் ஆண்டிற்கான 4 ஆவது வருடார்ந்த இந்துக்களின் கிரிக்கெட் சமர் யாழ் கிரிக்கெட் சமர்களில் புதிய அத்தியாயத்தை எழுதும் என்பதில் ஐயமில்லை.

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது போட்டி சமநிலையில் முடிவுற்றது. 2009 ஆம் ஆண்டு வடக்கில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் ஆடம்பரங்கள் எதுவுமின்றி மிக எளிமையான முறையில் யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றிருந்தது. இப் போட்டியும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.


அத்துடன் 2010 ஆம் ஆண்டிற்கான இந்துக்களின் போர் கொக்குவில் இந்துக்கல்லூரியின் விஸ்தரிக்கப்பட்ட மைதானத்தின் புதிய ஆடுகளத்தில் நடைபெற்றது இப் போட்டியும் சமநிலையில் முடிவடைந்தது. எது எப்படியோ இந்துக்களின் போர் என்னும் போது புதிய யுக்திகளுடன் இரு அணிகளும் ஆடும் என்பதால் ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி



இருப்போர் (இ-வ) - திரு.கு.பகீரதன் (பொறுப்பாசிரியர்), சி.செந்தூரன் (தலைவர்), திரு.வீ.கணேசராசா (அதிபர்), கி.கிரிஷோபன் (உபதலைவர்), திரு.பா.ஜெயரட்ணராஜா (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), திரு.தி.கௌசிகன் (பயிற்றுனர்), நிற்போர் 1ம் வரிசை (இ.வ) - க.டிலக்ஷன், வ.நிலாஜனன், ஜெ.கல்கோகன், ஜெ.சஜீகன், சி.சாரங்கன், கி.மதுசன், ரா.அனோஜன், ர.றுக்ஸ்மன், நிற்போர் 2ம் வரிசை (இ.வ) - அ.பார்த்தீபன், கு.சிவேந்திரன், வி.வாமணன், மு.விதுன், ர.ரஜீவன், ரா.நிருஜன், க.கஜீபராஜ், வ.ஜஸ்மினன், சமூகமளிக்காதவர்கள்: ஜெ.சங்கீர்த்தனன், வி.சிந்துஜன், எஸ்.சஜீவன்.

## கொக்குவில் இந்துக் கல்லூரி அணி



இருப்பவர்கள் (இ-வ) - ஐ.சசிகுமார் (உடற்கல்வி ஆசிரியர்), எஸ்.சதீஸ்குமார் (பொறுப்பாசிரியர்), கே.ஜனுதாஸ் (துணை அணித்தலைவர்), ஏ.அகிலதாஸ் (அதிபர்), எஸ்.உத்தமகுமரன் (அணித்தலைவர்), என்.கந்தவச்செல்வம் (விளையாட்டுத்துறைப்பொறுப்பாசிரியர்), எம்.வேலாயுதபிள்ளை (அணிமுகாமையாளர்), எஸ்.கோகுலன் (பயிற்றுவிப்பாளர்), நிற்பவர்கள் (இ-வ) - கே.திவாகர், எல்.ஆதித்தன், கே.சிலோஜன், எஸ்.சாம்பவன், ஆர்.பார்த்திபன், கே.இராகுலன், எஸ்.சுஜீதரன், என்.சங்கீத், பி.பங்குஜன், ரி.சுதீகன், ஜே.கீர்த்திகன், ஜி.லிங்கநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

# ஆஸி. அணிக்கு இலகு வெற்றி

# கனடா அணி விடைபெற்றது



(பெங்களூர்)

பிரெட் லீ, வோட்ஷனின் அபார ஆட்டம் கைகொடுக்க அவுஸ்திரேலிய அணி கனடாவை 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வீழ்த்தியது.

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் பெங்களூரில் நேற்று நடைபெற்ற 35ஆவது லீக் போட்டியில் ஏ பிரிவைச் சேர்ந்த அவுஸ்திரேலிய-கனடா அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கனடா அணித் தலைவர் பாகாஜ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் களமிறங்கிய கனடா அணிக்கு பட்டேல்-டேவிசன் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் டேவிசன் 12 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 14 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க கனடா அணி 3.5 ஓவர்களில் 41 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டையிழந்தது.



அடுத்து களமிறங்கிய சுர்காரி நிதானமாக ஆட மறுமுனையில் அதிரடியாக ஆடி பிரெட், ஜோன்சன் பந்துகளில் தலா ஒரு சிக்ஸர் பறக்கவிட்ட பட்டேல் 37 பந்துகளில் அரைச்சதம் பெற்றார்.

எனினும் பட்டேல் 45 பந்துகளில் (5 பவுண்டரிகள், 3 சிக்ஸ்சர்கள் உட்பட) 54 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித்தலைவர் பாகாஜ் பொறுப்புடன் ஆட கனடா அணி 16.1 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடி 68 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது அணித்தலைவர் பாகாஜ் 55 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 39 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கி ஹான்ஸ்ரா 03 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்துஏமாற்றமளித்தார். மறுமுனையில் பொறுப்புடன் ஆடிய சுர்காரியும் 69 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 34 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழக்க கனடா அணி 30.4 ஓவர்களில் 157 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

பின் வரிசையில் வாத்தம் 18, பைட்வான் 17 ஓட்டங்களை தமது பங்கிற்கு எடுக்க கனடா அணி 45.4 ஓவர்களில் 211 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

பந்து வீச்சில் பிரெட் லீ 4 விக்கெட்டுக்களையும் தைட், கிரேஷா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஜோன்சன், வோட்ஷன் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு சுலப இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு வோட்ஷன்-ஹடின் ஜோடி பொறுப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

ஆரம்பத்தில் நிதானமாக ஆடிய இந்த ஜோடி 20 ஓவர்களின் பின் அதிரடியைத் தொடர்ந்தது.

இதில் ஹடின் 63 பந்துகளிலும் வோட்ஷன் 71 பந்துகளிலும் அரைச் சதம் கடந்தனர்.

இந்த ஜோடி 28.5 ஓவர்களில் 183 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது பிரோட் ஹடின் 84 பந்துகளில் (11 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 88 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பொன்டிங் களமிறங்க மறுமுனையில் ஷேன் வோட்சன் 90 பந்துகளில் (9 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 94 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்து சதம் பெறும் வாய்ப்பை இழந்தார்.

அடுத்து மைக்கெல் கிளார்க் களமிறங்க மறுமுனையில் அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் 07 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இந் நிலையில் அவுஸ்திரேலிய அணி 34.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 212 ஓட்டங்களைக் குவித்தது.

இதன் மூலம் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி 9 புள்ளிகளைப்பதிவு செய்தது.

இதில் மைக்கெல் கிளார்க் 16, வைற் 04 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஏசின்டோ, பைட்வான், டேவிசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.



இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் வோட்ஷன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இதேவேளை தனது 6ஆவதும் கடைசியுமான லீக் போட்டியில் விளையாடிய கனடா அணி தொடரில் ஒரு வெற்றியுடன் (கென்யா அணியை வென்று) முதல் சுற்றுடன் விடைபெற்றது.

**வோட்ஷன் சாதனை**

இப் போட்டியில் டேவிசனின் பந்தில் வோட்ஷன் இமாலய சிக்ஸ்சர் விளாசினார். இந்த சிக்ஸ்சர் 104 மீற்றர் நீளமாக அமைந்தது.

இதன் மூலம் இந்தத் தொடரில் மிக நீளமான சிக்ஸர் அடித்த வீரர் என்ற சாதனை வோட்ஷன் பதிவு செய்தார்.

## புள்ளிப் பட்டியல்

ICC Cricket World Cup 2011

### பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 5 | 4 | 0 | 0 | 1 | 9 | +1.693 |
| நியூசிலாந்து | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +1.957 |
| பாகிஸ்தான் | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +0.729 |
| இலங்கை | 5 | 3 | 1 | 0 | 1 | 7 | +2.705 |
| சிம்பாவே | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -0.669 |
| கனடா | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.987 |
| கென்யா | 5 | 0 | 5 | 0 | 0 | 0 | -3.005 |

### பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| தென்னாபிரிக்கா | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +1.606 |
| இந்தியா | 5 | 3 | 1 | 1 | 0 | 7 | +0.768 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +2.206 |
| பங்களாதேஷ் | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | -0.765 |
| இங்கிலாந்து | 5 | 2 | 2 | 1 | 0 | 5 | +0.013 |
| அயர்லாந்து | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -0.881 |
| நெதர்லாந்து | 5 | 0 | 5 | 0 | 0 | 0 | -2.386 |

## நாளைய ஆட்டம்

cricket world Cup 2011

அயர்லாந்து எதிர் நெதர்லாந்து

காலை 9.30

கொல்கத்தா

cricket world Cup 2011

இலங்கை எதிர் நியூசிலாந்து

மாலை 2.30

மும்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிலமழை, அணுத்தாக்கம் வதந்திகளே; அச்சம் வேண்டாம்

## அணுசக்தி அதிகாரசபைத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜப்பான் அணுவுலை வெடிப்பினால் இலங்கைக்கு எவ்விதமான பாதிப்பும் இல்லையென அணுசக்தி அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்கிரம தெரிவித்துள்ளார். எனினும் முற்கூட்டிய பாதுகாப்புத் தொடர்பில் அணுக்கதிர்வீச்சுத் தொடர்பான ஆய்வுகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு உடனடியாக எந்தவிதமான பாதிப்புக்களும் இல்லை என்பதால் மக்கள் வீணாக அச்சம் கொள்ளத் தேவையில்லை என அணுசக்தி அதிகாரசபை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் கூறினார்.

ஜப்பானின் புகுஷிமா அணுமின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட வெடிப்புக்களால் அணுக் கசிவுகள் எதுவும் ஏற்படவில்லையென சர்வதேச அணு சக்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

அணுமின் நிலையத்திலுள்ள குளிரூட்டிகளின் தடுப்புச் சுவர்களே அதிக வெப்பம் காரணமாக வெடித்துள்ளன. அணுக்கதிர்கள் பரவுவதற்கான சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை என்பதால் மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை.

அவ்வாறு அணுக்கசிவு ஏற்பட்டாலும் வளிமண்டலத்தில் கலந்துகொள்ளும் அணுக்கதிர்கள் இலங்கையை வந்தடைவதற்கு 03 வாரங்கள் அல்லது ஒரு மாதம் செல்லும். வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்று கடந்த பெப்ரவரி மாதத்தில் முடிபடைந்துள்ளது. தற்பொழுது பருவப்பெயர்ச்சிக் காற்றின் தாக்கம் குறைந்திருப்பதுடன் பருவப்பெயர்ச்சிக்கு இடைப்பட்ட காலமே தற்பொழுது நிலவிவருகிறது.

இதனால் ஜப்பானில் ஏற்பட்ட கதிர் வீச்சு இலங்கையைத் தாக்காது. அதேநேரம் இலங்கையில் அமிலமழை பொழியும், அணுத்தாக்கம் ஏற்படும் என வெளியிடப்படும் தகவல்களில் உண்மை எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (ந-5)

## நாராயணன்...

தாக இந்தியாவிலுள்ள அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் மீதான அவரது தீவிர எதிர்ப்புணர்வே அதற்கு பிரதான காரணம் என்றும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை மேற்கோள் காட்டி விக்கிலீக்ஸ தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப்புலிகளுடன் அரசு யுத்தம் நடத்திக்கொண்டிருந்த வேளை, இலங்கைக்கு வந்திருந்த நாராயணன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை சந்தித்து விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டம்மானையாவது இந்தியாவிடம் ஒப்படைத்தால் வன்னியுத்தத்தில் இந்தியா தலையிடும் என கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

## க.பொ.த [சா...

சித்தியைப் பெற்றுள்ளனர். கடந்தவருடம் இப்பெறுபேற்றை 1020 மாணவர்கள் பெற்றிருந்தனர்.

அதேவேளை கணிதபாடத்தில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை கடந்த தடவை 44.31 சதவீதமாக இருந்தது. இம்முறை அது 61.61 சதவீதமாக அதிகரித்துள்ளது. விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை 37.35 சதவீதத்திலிருந்து 41.41 சதவீதமாக அதிகரித்துள்ளது. (ந-5)

## அரசு- த.தே...

சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடன் சட்டத்தரணி எஸ்.கனகேஸ்வரனும் கலந்து கொள்வார். அரச தரப்பில் பிரதமர் டி.எம்.ஜயரட்ண, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, சச்சின்வாஸ் குணவர்த்தன ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-5)

## கருணாவின்...

நீண்ட நாட்களாக வெளிநாட்டில் தங்கியிருந்த அவர் நாடுதிரும்பிய போது அவரை கருணாவே நேரடியாகச் சென்று விமானநிலையத்திலிருந்து அழைத்துவந்திருந்தார்.

அலிசாஹிர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஏறாவூர் நகரசபைக்கான முதன்மை வேட்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## இந்திய விஸா...

பின்னணியை கொண்ட 2.5X2.5 சென்றிமீற்றர் அளவிலான இரு புகைப்படங்களை ஒட்டி, கையெழுத்திட்டு, தேவையான ஆவணங்களுடன் விஸாவுக்கான கட்டணத்தையும் கொழும்பு, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள விஸா விண்ணப்ப நிலையங்கள் மற்றும் ஹம்பாந்தோட்டையிலுள்ள கவுன்ஸிலர் நிலையத்திலும் விஸா விண்ணப்பத்தைப் சமர்ப்பிக்க முடியும். (ந-5)

## நாடு கடந்த தமி...

கபூர்வமாக அமைக்கவுள்ளது என்றார்.

இக் கூட்டரங்கில், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் துணைப் பிரதமர் இ.செல்வநாதன், வெளிவிவகார அரசியல்துறை துணை அமைச்சர் க.மாணிக்கவாசகர், சபாநாயகர் பொன்.பாலராஜன் ஆகியோருடன் மலேசிய பினாங்கு மாநில துணை முதலமைச்சர் முனைவர் பி.இராமசாமி, மனிதவுரிமை செயற்பாட்டாளர் வழக்கறிஞர் பசுபதி ஐயா உட்பட பலர் பங்கெடுத்திருந்தனர். (ந-5)


Computers & Accessories For Sales

HP Desktop
P4 1.6GHz
Intel Mother Board
256 MB RAM
40GB / 20 GB HDD
On Board VGA, Sound
CDRom
Black15" Monitor
Keyboard, Mouse
Rs. 9,500/=

Tower Casing
P4 2.8GHz
Intel Mother Board
512 MB RAM
80GB / 40GB HDD
On Board VGA, Sound
DVD Rom
Black15" Monitor
Keyboard, Mouse
Rs. 13,900/=

Used Accessories
HP478 M Board on vga, sound - 3000/=
775 M. Board on vga,sound - 3900/=
CRT Monitor 15" - 3000/=
IDE 40GB HDD - 2000/=
IDE/SATA 80GB HDD - 2800/=
512 DDR1 RAM -2000/=
LGA 2.8 Processor - 2800/=
DVD combo - 1500/=

New Accessories
Biostar G41D3B - 6000/=
2GB DDR 3 - 2900/=
3.0 Doul Core Processor 7900/=
15.5 "Topview LCD - 9,650/=
19' Dell LCD 13500/=
DCP UPS - 3900/-
External DVD Writer -5,750/=
Webcam 10MB -1,800/=

ASK Computers
No:50, Chetty Street Lane, Nallur,Jaffna.
Special Price for Whole Sales Purchase
Tel : 077 135 0476 / 021 300 8960 Hotline : 077 832 0896
(சி-2713)


# மரண அறிவித்தல்கள்

## சின்னையா செல்வநாயகம்



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா சூசைப்பிள்ளையார்குளத்தை வதிவிடமாகவும், இந்தியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னையா செல்வநாயகம் அவர்கள் 16.03.2011 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் மருமகனும், சரோஜா அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சுகிர்தநாயகம், காலஞ்சென்ற குணநாயகம், காலஞ்சென்ற கனகநாயகம், காலஞ்சென்ற தனநாயகம் மற்றும் சின்னராசா ஆகியோரின் அன்புச்சகோதரனும், செல்வகுமார், காலஞ்சென்ற செல்வச்சந்திரன், தமிழ்அரசி, ஜீவபூரணி, மதியழகன், செந்தூரன், துளசி ஆகியோரின் அன்புத் தந்தையும், தவச்செல்வி, இரவீந்திரகுமார், இராசகுமார், மயூரன் ஆகியோரின் மாமனாரும், லாவன்யா, பிரவீன், தஸ்வினி, ரவின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.03.2011 வியாழக்கிழமை அன்று இந்தியாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பேரூர் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்தியா
00917871329396

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

(சி-2712)

## தம்பு கணநாதன் (குணம்)



மணல்தறையைப் பிறப்பிடமாகவும் 34/6, மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட குணம் என்று அழைக்கப்படும் தம்பு கணநாதன் 13.03.2011 ஞாயிறு இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும் அமரர் சரஸ்வதியின் அன்புக் கணவரும் திருமதி நாகமணி-சிந்தாமணியின் அன்பு மருமகனும் த.பாக்கியநாதன், அமரர் த.ஸ்ரீபத்மநாதன் (கனடா), த.குருநாதன் (வவுனியா) மற்றும் திருமதி த.சொர்ணலட்சுமி, திருமதி த.அன்னலட்சுமி (அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளர், தீவகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திருமதி வி.மைதிலி (உதவி நூலகர், யாழ்.பல்கலைக்கழகம்), க.ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), திருமதி தே.ஜானிகி (அவுஸ்திரேலியா), திருமதி சி.வைதேகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்

பேராசிரியர் கி.விசாகரூபன் (தமிழ்த்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்), திருமதி ஸ்ரீ.அஜந்தா (லண்டன்), வை.தேவதாசன் (அவுஸ்திரேலியா), இ.சிவானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும் வி.சண்முகன், ஸ்ரீவேணுஜன், ஸ்ரீசரண்யா, தே.கரிஷ்மா, தே.தேஜா, சி.சாயகி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.03.2011) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பி.ப. 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப. 4 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34/6, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:0212225363

தகவல்: மகன் க.ஸ்ரீஸ்கந்தராஜா
(லண்டன்)
மருமகன் பேராசிரியர் கி.விசாகரூபன்

(4056)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org